Registered as a news paper.		பக்கங்கள்: பன்னிரண்டு+II		விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 பங்குனி - 26 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஸபர் 28 (08.04.2005) வெள்ளிக்கிழமை இதழ்:191




## பாப்பரசருக்கு அஞ்சலி செலுத்த இன்று துக்கதினம் அனுஷ்டிப்பு!



(யாழ்ப்பாணம்)

மானுட விடுதலைக்காக வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த கத்தோலிக்கத் திருச்சபையின் ஆன்மிகத் தலைவர் பாப்பரசர் இரண்டாவது ஜோன் போலின் இறுதிச்சடங்கு இன்று நடைபெறவுள்ளதை முன்னிட்டு யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இன்று துக்கதினம் அனுஷ்டிக்குமாறு பொது அமைப்புக்களின் ஒன்றியங்கள் கோரியுள்ளன.

வத்திக்கானில் இறுதிச் சடங்கு நடைபெறவுள்ள இன்றைய தினத்தில் - அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இந்த துக்கதினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இயல்புநிலையைப் பாதிக்காத வகையில் - அனைத்து மக்களையும், (12 ஆம் பக்கம் பார்க்க)

## நெதர்லாந்து அதிகாரிகளுடன் தமிழ்ச்செல்வன் குழு சந்திப்பு!

(கொழும்பு)

ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் நெதர்லாந்து நாட்டின் வெகுன்ஜிஜன் சமூக அறிவியல் குழுவின் பேராசிரியர் எல்.ஜோர்ஜ் பெக்சுடன் கலந்துரையாடலொன்றை நடத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் நடந்த இந்தச் சந்திப்பில் - சுனாமி அனர்த்தத்தால் வடக்கு - கிழக்கு பகுதிகளில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் இழப்புக்கள் குறித்து தமது அனுதாபங்களை அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழிச்செல்வனிடம் பேராசிரியர் ஜோர்ஜ் தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு கடந்த பெப்ரவரி மாதம் ன் (12 ஆம் பக்கம் பார்க்க)



# சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஊடாக பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த திட்டம்!

## நோர்வே அரசு புதிய முயற்சி

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு பகுதிகளுக்கு சர்வதேச நிதியுதவிகளை பகிர்ந்தளிப்பதற்கான பொதுக்கட்டமைப்பை சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதனூடாக மேற்கொள்வதற்கான புதிய திட்டம் ஒன்றை நோர்வே அரசாங்கம் முன்வைத்திருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் விடயத்தில் அரசின் பங்காளிகளான ஜே.வி.பியினர் கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்திவருவதால், பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவது சாத்தியமற்றதாகி வருவதாக நோர்வே தரப்பு கருதுகின்றது.

இதனால் தடைப்பட்டுள்ள சமாதான பேச்சுக்களை மீள ஆரம்பித்து அதன் ஊடாக இந்தப் பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதற்கான யோசனை ஒன்றை நோர்வேத் தரப்பு முன்வைத்துள்ளது.

இதுகுறித்து ஆராய்வதற்கு நோர்வே வெளியுறவு அமைச்சின் ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபை யோசனைகளுக்கு மாற்றீடாக பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் ஆராயும் வகையிலான ஏற்பாடு ஒன்றை நோர்வேத் தரப்பு கொண்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



# பேச்சை உடன் ஆரம்பிக்காவிடின் அனைத்தும் கெட்டுப்போய்விடும்!

## செவனகல கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா

## எஸ்.எம்.எஸ். மூலம் செல்போன்களில் வைரஸ்!

(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசிகளைத் தாக்கி செயலிழக்கச் செய்யும் வைரஸ் ஒன்று இலங்கையில் பரவிவருவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. எஸ்.எம்.எஸ். ஊடாகவே இந்த வைரஸ் கையடக்கத் தொலை



கெட்டுப்போம் எண்டு தெரிஞ்சும் அம்மா பின்னடிக்கிறாதானே....!-

# அனைத்தும் கெட்டுப்போய்விடும்!

## செவனகல கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

அரசியல் கட்சிகள் எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டிருந்தாலும் - விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்க வேண்டியது அவசியம். நாட்டின் அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டு பேச்சுக்களை ஆரம்பிக்காவிட்டால் அனைத்துமே கெட்டுவிடும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

செவனகலவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும் போது -

தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சு

(12 ஆம் பக்கம் பார்க்க)



(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசிகளைத் தாக்கி செயலிழக்கச் செய்யும் வைரஸ் ஒன்று இலங்கையில் பரவிவருவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது. எஸ்.எம்.எஸ். ஊடாகவே இந்த வைரஸ் கையடக்கத் தொலைபேசிகளுக்கு அனுப்பப்படுவதாகவும், வைரஸ் தாக்கத்துக்குட்பட்ட தொலைபேசியில் - நட்சத்திரக்குறியுடன் ஆங்கில எழுத்தான P தோன்றுவதாகவும் அதன்பின் தொலைபேசி முற்றாகச் செயலிழந்துவிடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வைரஸ் தாக்குதலுக்குட்படும் தொலைபேசிகளைத் திருத்தமுடியாதெனவும் தெரிக்கப்படுகிறது.

# கண்காணிப்புக்குழு தலைவர் கேணல் பானுவுடன் சந்திப்பு!

(அம்பாறை)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பானுவை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

கொக்கட்டிச்சோலை சோலையகத்தில் இந்தச் சந்திப்பு நேற்றுப் பிற்பகல் 2 மணியிலிருந்து சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் இடம்பெற்றது.

இதன்போது பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவித்த போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் -

கருணா குழு தொடர்பாக பேச்சு நடத்தப்பட்டது.எனினும், எந்தவித முடிவுகளும் எடுக்கப்படவில்லை.

படையினரும் தமிழீழ விடுதலைப் புலிகளும் இணைந்து செயற்பட்டால் மாவட்டத்தில் இடம்பெறும் கொலைகளை நிறுத்தமுடியும் என நம்புவதாகத் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தப் பேச்சுக்கள் தொடர்பாக கேணல் பானு கருத்துத் தெரிவிக்கும்போது -

கருணா குழு எனக் கூறப்படுகின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

க.பொ.த. (சா/த) - 2004
முன்னணிப் பெறுபேறுகள்
11 ஆம் பக்கத்தில் ☞

# பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக இறுதி வடிவம் தயாராகவில்லை!

## வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் சுனாமி அனர்த்த நிவாரண உதவிகளைப் பகிர்ந்தளிப்பதற்கான பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பான இறுதி வரைபு எதையும் அரசாங்கம் தயாரிக்கவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

குறிப்பிட்ட பிரதேசங்களில் சுனாமி நிவாரணங்கள் சம அளவில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றோம். பாரிய அளவிலான நிவாரணப் பகிர்ந்தளிப்புகளை மாவட்ட செயலரின் ஊடாக மேற்கொள்ள முடியாது. சுனாமி அனர்த்தத்தினால் வடக்கு - கிழக்கில் பாரிய சேதம் ஏற்பட்டது.

இந்தப் பிரதேசத்தில் புனரமைப்புப் பணிகளை எவ்வாறு மேற்கொள்வது என்ற பிரச்சினை அரசாங்கத்துக்கு எழுந்திருக்கின்றது. விடுதலைப் புலிகளும் இணங்கிச் செயற்படவேண்டிய நிலை உள்ளது. முறையான கட்டமைப்பு ஒன்று இல்லாது வடக்கு - கிழக்கில் சுனாமி நிவாரணம் பகிர்ந்தளிப்பது கடினமான விடயம். விடுதலைப் புலிகளுடன் சுனாமி நிவாரணப் பகிர்வில் ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்தால் அனைத்தையும் விடுதலைப் புலிகளுக்கு வழங்கி விடுவார்கள் என்ற பிரச்சினை ஒன்று நாட்டில் எழுந்துள்ளது.

தற்போது நாம் முன்வைத்துள்ள பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக விடுதலைப் புலிகளின் பதில் எமக்கு இது வரையும் கிடைக்கவில்லை. இந்த விடயம் குறித்தும் இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை. பேச்சுவார்த்தை மட்டத்திலேயே இருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

மனோகரா திரையரங்கு
06.04.2005 முதல் தனுஷ், ஸ்ரீதேவி, கருணாஸ் நடித்த
தேவதையைக் கண்டேன்
கா.நே 6.30, 9.30 (பு.நே)
யாழ்ப்பாணம்
பார்த்தீபன், காவேரி, மாஸ்ரர் அஸ்வின் மற்றும் பலர் நடித்த கண்ணாடிப் பூக்கள் (சிறந்த குடும்ப காவியம்)
கா.நேரம்: 10.30, 2.30, 6.30 மட்டும் (பு.நே)
(சி-3978)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், ரவிகிருஸ்ணா, நத்ஷா
நடித்த
சுக்ரன்
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
(சி-3976)

நாகம்ஸ் சுன்னாகம்
பிரசாந், வடிவேலு, மும்தாஜ் நடித்த
லண்டன்
இயக்கம் — சுந்தர். சி
09 ஆம் திகதி முதல் ஜி
கா.நே. 11.00, 3.00, 7.00,
(சி-3979)

ராஜா யாழ்ப்பாணம்
கருணாஸ், ரிச்சா,
தலைவாசல் விஜய்
நடித்த
கையோடு கை
(சி-3980) பு.நே: 10.30, 2.30, 6.30

## நூல் வெளியீடு

'கூட்டுறவுக் கருவூலங்கள்' நூல் வெளியீட்டுவிழா நாளை காலை 10.00 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பிராந்தியக் கூட்டுறவுக் கல்லூரியின் முன்னாள் அதிபர் இ.சுப்பிரமணியம் எழுதியுள்ள இந்த நூலின் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக் கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜா நிகழ்த்தவுள்ளார். (91)

## கூட்டம்

ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத்திட்ட - 2005ஆம் ஆண்டுக்கான முன்மொழியப்பட்ட வேலைகளை மதிப்பீடு செய்தலும், மீளத் தயாரித்தலுக்குமான கூட்டம் இன்று காலை 9.00 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது. (63)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு
தாவடி மைந்தன் குளிரூட்டப்பட்டது
ஜெய் ஆகாஷ், பிரணதி,
நாசர், தாமு, வையாபுரி நடித்த


கா.நே(பு.நே) ▷ 10.30, 2.30, 6.30, 9.30 (சி-3977)

## கலந்துரையாடல்

அதிகரித்துவரும் வீதி விபத்துக்களைத் தடுப்பது தொடர்பான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நடைபெறவுள்ளது. (63)

## இசை நாடகம்

கலாபூசணம் செல்லையா மெற்றாஸ் மெயிலின் பவளக்கொடி இசை நாடகம் புங்குடுதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த பெருவிழாவை முன்னிட்டு எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. (91)

## லொறி தடம் புரண்டது

சீமெந்துப் பொதிகளை ஏற்றி வந்த லொறி ஒன்று நேற்று கோப்பாய் பாலத்துக்கு அண்மையாக வீதியை விட்டு விலகி தடம்புரண்டது.

இதனால் லொறியில் இருந்த சீமெந்துப் பொதிகள் வீதி மற்றும் பாலத்துக்கு அருகிலுள்ள கரையோரப் பகுதிகளில் சிதறி வீழ்ந்தன. இன்னொரு வாகனத்துக்கு வழிவிட முற்பட்டபோதே இந்த விபத்து ஏற்பட்டது. (29)

## அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம்

கொக்குவில் இந்துக் கல்லூரியின் அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் நாளை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை அதிபர் பொ.கமலநாதன் தலைமையில் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

சிலமுக்கிய தீர்மானங்கள் மேற்கொள்ளவுள்ளதால் பெற்றோர், ஆசிரியர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு செயலாளர் செ.செல்வக்குமாரன் தெரிவித்துள்ளார். (91)

Direct Start
புத்தாண்டு சிறப்பு சலுகை
Diploma in MS Office (MSO)
Diploma in Computer Studies (DICS)
Diploma in Computer Programming (DCP)
Diploma in Desktop Publishing (DTP)
Diploma in Web Design (DWD)
Diploma in Computerised Accounting (DCA)
அனைத்து பாடநெறிகளும் 3 – 4 மாதங்கள்


இலவச பாடநூல்களும் குறிப்புகள்
Select Any Course Pay 3,900/- only
- மூன்றாம் நிலை தொழிற்கல்வி அமைச்சின் அங்கீகாரம்
- 12 ஆண்டுகள் கணினி கல்விச் சேவையில் அனுபவம்
- இலவச பாடநூல்கள் குறிப்புகள் ஒவ்வொரு மாணவரிலும் தனிப்பட்ட கவனம்
- இடம் மாறி கற்கும் வாய்ப்பு
- ICM UK ஆல் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்
- கட்டணங்கள் தவனை முறையிலும் லுெத்தலாம்
- நவீன சமகால கணினி பாடநெறிகள்

ASIAN COMPUTER SYSTEMS

| | | | | |
|---|---|---|---|---|
| 2 G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ✆ 021-222 5677 | 108, K.K.S.வீதி, சுன்னாகம் (Jet Motors மேல் மாடி) ✆ 071-2501589 | கொடிகாமம் வீதி நெல்லியடி. ✆ 0773-122198 | கண்டி வீதி சாவகச்சேரி. ✆ 077-3039587 | கணினியியல் கல்லூரி யாழ்சாலை, கிளிநொச்சி. |


5 ஆவது பிறந்ததின வாழ்த்து
கொக்குவில் மேற்கு பிடாரிகோவிலடியைச் சேர்ந்த
வலன்டன் கிரிஜா தம்பதிகளின்
சிரேஷ்ட புதல்வன்
ஷாருஜன்
தனது 5 ஆவது பிறந்த தினத்தை இன்று 08.04.2005 வெள்ளிக்கிழமை டென்மார்க்கில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.
ஷாருஜன் குட்டியை இலங்கையில் வசிக்கும் அம்மம்மா, குட்டி அம்மம்மா, அப்பப்பா, அண்ணாமார், அக்காமார் மற்றும் உறவினர்கள் அனைவரும் அந்தோனியார் அருள் பெற்றுப் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகிறார்கள்.
அன்னா ராஜன் - கொக்குவில் மேற்கு, பிடாரி கோவிலடி.
(C/4031)

# நமது ஈழநாடு அனுசரணையில் SAAMSTECH இன்

## யாழ்.மாவட்ட அனைத்துப்பாடசாலை மாணவர்களுக்குமான

# இலவச ஆங்கில நேரடி வகுப்பு

**ஆங்கிலத்தைக் கதைப்பதற்கான முழுமையான அடித்தளத்தை விருத்திசெய்யும் வகுப்பு**

## இடம் ➔ மத்திய கல்லூரி

**09.04.2005 சனிக்கிழமை** ( ஏதாவதொரு வகுப்பில் கலந்துகொள்ளலாம் )

காலை 11.00 முதல் 12.00 | காலை 12.00 முதல் 1.00 | மாலை 2.00 முதல் 3.00
மாலை 3.00 முதல் 4.00 | மாலை 4.00 முதல் 5.00

**10.04.2005 ஞாயிற்றுக்கிழமை** (ஏதாவதொரு வகுப்பில் கலந்துகொள்ளலாம் )

காலை 9.00 முதல் 10.00 | காலை 10.00 முதல் 11.00 | காலை 11.00 முதல் 12.00
மாலை 2.00 முதல் 3.00 | மாலை 3.00 முதல் 4.00 | மாலை 4.00 முதல் 5.00

## கலந்துகொள்ளும் அனைவருக்கும் மாணவர்களுக்கான ஆங்கிலக்கற்றலுக்கான புத்தகம் இலவசம்

யாழ்.மாவட்ட அனைத்துப்பாடசாலைகளையும் சேர்ந்த 6 ஆம் வகுப்பு முதல் க.பொ.த உ.த மாணவர்கள், இவ்வருட க.பொ.த சா.த பரீட்சையில் பெறுபேறுகளைப்பெற்றவர்கள் மற்றும் க.பொ.த உ.த பரீட்சையில் கலந்துகொள்ளவிருப்பவர்கள் அனைவரும் கலந்துகொள்ளலாம்

இந்த இலவச வகுப்பில் கலந்துகொள்ளும் மாணவர்கள் ஆங்கிலத்தில் கதைப்பதற்கான வேறுபட்ட சிந்தனையில் உருவான புதிய முறையினைக்கற்றுக்கொள்வதோடு பாடசாலைகள் தோறும் நடைபெறவுள்ள மாணவர்களுக்கான ஆங்கிலக்கற்கைநெறிக்கான புலமைப்பரிசில் பரீட்சைக்கும் தயார்செய்துகொள்ள முடியும்.

# பொதுக் கட்டமைப்பை தடுக்குமாறு தேசிய பிக்குகள் முன்னணி கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் பொதுக் கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தும் முயற்சிகளைத் தடுத்துநிறுத்துமாறு - மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீடங்களின் பீடாதிபதிகளிடம் தேசிய பிக்குகள் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த செவ்வாயன்று இந்தப் பீடங்களின் பீடாதிபதிகளைச் சந்தித்த தேசிய பிக்குகள் முன்னணியின் முக்கியஸ்தர்கள் தமது கோரிக்கை அடங்கிய கடிதங்களைச் சமர்ப்பித்தனர்.

மல்வத்த பீடத்தின் பீடாதிபதி திப்பொட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் மற்றும் அஸ்கிரிய பீடத்தின் பீடாதிபதி ஸ்ரீ புத்தரக்கித்த தேரர் ஆகியோரை, தேசிய பிக்குகள் முன்னணியின் முக்கியஸ்தர்கள் செவ்வாயன்று சந்தித்தனர்.

இதன்போது வடக்கு - கிழக்கு கடற்கோள் அனர்த்த நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்தும் முயற்சிகளைத் தடுத்துநிறுத்துமாறு கோரும் கடிதங்களை தேசிய பிக்குகள் முன்னணியின் முக்கியஸ்தர்கள் - பீடாதிபதிகளிடம் சமர்ப்பித்துள்ளனர்.

அரசாங்கத்துக்கும் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்தும் முயற்சிகள் தமிழீழத்தை உறுதிப்படுத்தும் செயற்பாடு என்று இதன்போது வர்ணித்துள்ள தேசிய பிக்குகள் முன்னணியினர் -

இதனை எப்படியாவது தடுத்து நிறுத்தவேண்டும் என்று மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீடங்களின் பீடாதிபதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (01)

# படையினரின்சூட்டில் பள்ளிவாசல் சேதம்!

(திருகோணமலை)

திருகோணமலையில் இராணுவத்தினரின் டாங்கியிலிருந்து சுடப்பட்ட ரவைகள் - பள்ளிவாசல் ஒன்றின் கூரை, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் கூடாரம் என்பவற்றை தாக்கிச் சேதப்படுத்தின.

நேற்றுமுன்தினம் காலை 11.15 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

திருகோணமலை கிளப்பன் பேர்க் இராணுவ கவசப் படைப்பிரிவு பயிற்சி முகாமில் இருந்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. பயிற்சியில் ஈடுபட்ட டாங்கிகளில் இருந்து சுடப்பட்ட ரவைகளே பள்ளிவாசல் மற்றும் மக்களின் கூடாரங்களைச் சேதப்படுத்தியதாகத் தெரியவருகிறது.

# தொழிற்சங்கத்துடனான அரசின் பேச்சு வெற்றியடைந்துள்ளதாம்!

(கொழும்பு)

மின்சார சபை தொழிற்சங்கங்களுக்கும், அரசாங்கத்துக்குமிடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தை வெற்றியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மின்சார சபையை மீள்கட்டுமானம் செய்வது தொடர்பாகத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் - அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தை நேற்றுமுன்தினம் நிதியமைச்சில் இடம்பெற்றது.

இதில் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டதுடன், பேச்சுவார்த்தை வெற்றிகரப[illegible] நிறைவேறியதாகவும் - இர[illegible]டு தரப்புகளும் தெரிவித்தன.

எனினும், இந்தப் பேச்சுவார்த்தையில் எவ்வித இணக்கமும் ஏற்படவில்லையெனவும், சித்திரைப் புத்தாண்டுக்குப் பின்னர் பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாக அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்தார்.

மின்சார சபையை இரத்துச் செயத பின்னர் மீள்கட்டமைக்கப்படும் என்பதே தொழிற்சங்கங்களின் நிலைப்பாடாகக் காணப்படுவதாக - இலங்கை மின்சார சபையின் ஊழியர் சங்கப் பொதுச் செயலர் ரஞ்சன் ஜெலால் தெரிவித்தார். இதற்கு அரசாங்கத்திலிருந்து சாதகமான பதில் கிடைத்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மின் உற்பத்தி மற்றும் விநியோகம் உட்பட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக தற்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், இரண்டு தரப்பினருக்குமிடையே இணக்கப்பாடு ஏற்படும்வரை அமைச்சரவைப் பத்திரமொன்றைச் சமர்ப்பிக்காமல் இருப்பதற்கு அரசாங்கம் இணங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நிதியமைச்சின் செயலர் பி.பி. ஜயசுந்தர - ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் மனோதித்தவெல ஆகியோரும் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர். (தே)

# மலைநாட்டில் பாரிய மண்சரிவு ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளதாம்

## ஹெல உறுமய கூறுகிறது

(கொழும்பு)

எதிர்வரும் இரண்டு வருடங்களில் இலங்கையின் மலைநாட்டில் பாரிய மண்சரிவொன்று ஏற்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதாக நிமிர்த்தம் கூறுபவர்கள் எச்சரித்திருப்பதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

சுனாமி அனர்த்தம் தொடர்பான நாடாளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் கொட்டபொல அமரகீர்த்தி தேரர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில் -

கொத்மலை நீர்த்தேக்கத்தில் பாதிப்பு ஏற்பட்டிருப்பதால், எதிர்வரும் காலத்தில் பாரிய மண்சரிவொன்று ஏற்படுவதற்கான சாத்தியம் இருப்பதாக நிமிர்த்தம் கூறுபவர்கள் எதிர்வு கூறியிருப்பதாகவும் -

அவர்களின் இந்த எச்சரிக்கையைக் கவனத்திற்கொண்டு அதனைத் தடுப்பதற்கு அரசாங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்தார். (01)

# அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான புதிய சட்டமூலம் நாடாளுமன்றத்தில்!

## மே மாதம் நிறைவேற்றப்படும்

(கொழும்பு)

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான புதிய சட்டமூலம் எதிர்வரும் மே மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுமென - சமூக நலன்புரி அமைச்சர் சுமேதா ஜயசிங்க தெரிவித்தார்.

அரசாங்கம் முன்வைத்துள்ள இந்தப் புதிய சட்டமூலம் மிகவும் அவசியமானதும், விரைவில் அமுல்படுத்தவேண்டிய ஒன்றெனவும் மேல் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

சமூக நலன்புரி அமைச்சர் முன்வைத்துள்ள அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான புதிய சட்டமூலம் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை கிடைக்கப்பெறாததால் இரண்டு தடவைகள் ஒத்திவைக்கப்பட்டது.

இந்த விசேட சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுமென சமூக நலன்புரி அமைச்சர் சுமேதா ஜயசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார். இதேவேளை சுனாமி அனர்த்தம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய தெரிவுக்குழுவொன்றை சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டார நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)

## தரம் I அனுமதி முறைகேடு

# இரு பிரபலபாடசாலை அதிபர்கள் சேவையிலிருந்து இடைநிறுத்தம்!

(கொழும்பு)

பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக இடம்பெற்ற முறைப்பாடுகளை விசாரிக்கும் ஜனாதிபதி விசாரணைக் குழு இரு பிரபல பாடசாலை அதிபர்களை பணியிலிருந்து இடைநிறுத்தியுள்ளது.

கொழும்பு ஆனந்தா கல்லூரி மற்றும் கண்டி கிங்ஸ்வூட் கல்லூரி ஆகியவற்றின் அதிபர்களே இடைநிறுத்தப்பட்டவர்களாவர்.

2004 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்க கல்விச் சுற்றறிக்கைக்கு முரணாக இந்த இரண்டு அதிபர்களும் செயற்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக இந்த விசாரணைக்குழுவின் பணிப்பாளர் ஏ.ஏ.விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தமது பிள்ளைகளைச் சேர்க்க அதிபர்கள் அனுமதி மறுத்ததாக தெரிவித்து பெற்றோர்கள் இந்த விசாரணைக் குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தனர். இதையடுத்து ஆரம்பிக்கப்பட்ட விசாரணையில் தவறான ஆவணங்களைப்பயன்படுத்தியும், லஞ்சம் பெற்றும் மாணவர்களைப் பாடசாலைக்கு அனுமதித்தமை தெரியவந்தது.

கண்டி கிங்ஸ்வூட் கல்லூரி அதிபர் 18 தகுதியான மாணவர்களுக்கு அனுமதியை வழங்காமல் - தவறான ஆவணங்களைப் பயன்படுத்தியும், லஞ்சம் பெற்றும் 16 மாணவர்களை தனது கல்லூரிக்கு அனுமதித்துள்ளமையும் விசாரணை மூலம் தெரியவந்துள்ளது. இந்த இரண்டு கல்லூரி அதிபர்களுமே இதற்குப் பொறுப்பு என்றும், தமக்கும் இந்தச் செயலுக்கும் எவ்வித தொடர்புமில்லையென பிரதி அதிபர்களும், ஆசிரியர்களும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தமது விசாரணைக்குழுவிலுள்ள அதிகாரிகள் - பெற்றோர்கள்போல மாறுவேடம் பூண்டு தமது பிள்ளைகளுக்கு அனுமதி கேட்பதுபோல சில பாடசாலை அதிபர்களுக்கு லஞ்சம் கொடுத்தவேளை, அதனை அவர்களும் பெற்றதனால் அவர்களையும் கையும் மெய்யுமாகப் பிடித்துள்ளதாகவும் பணிப்பாளர் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இவ்வாறு பிடிப்பட்டவர்கள் குருநாகலிலுள்ள மாலியாதேவ பாலிகா வித்தியாலயம், மினுவான்கொடையிலுள்ள ஆனந்தா வித்தியாலயம் மற்றும் பன்னலவிலுள்ள தேசிய பாடசாலை ஆகியவற்றின் அதிபர்கள் எனவும் அவர் தெரிவித்தார். (தே) (01)

## மேல் மாகாணசபை

# முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

(கொழும்பு)

மேல் மாகாணசபை முதலமைச்சர் றெஜினோல்ட் குரேக்கு எதிராக - எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வரவுள்ளது.

முதலமைச்சருக்கு எதிராக 12 குற்றச்சாட்டுக்களை முன்வைத்துக் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில், ஐ.தே.கவின் மாகாணசபை உறுப்பினர்களான லக்ஷ்மன் அபயகுணவர்த்தன, டக்ளஸ் எம்.பெர்னாண்டோ, ஜோர்ஜ் பெரேரா ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

# கள்ள நோட்டு அச்சிட்ட ஐவர் பொலிஸாரால் கைது!

(கொழும்பு)

போலி நாணயத் தாள்கள் அச்சிட்டுப் புழக்கத்தில் விட்டதாகக் கூறப்படும் ஐவர் வத்தளைப் பகுதியில் கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்களால் அச்சிட்டு வைக்கப்பட்டிருந்த நூறு ரூபா போலி நாணயத் தாள்களும் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் போலி நாணயத் தாள்களை அச்சிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட கணினி உட்படப் பல உபகரணங்களைப் பொலிஸார் கைப்பற்றினர்.

சந்தேக நபர்கள் நீண்ட காலமாக இந்தக் குற்றச் செயலைப் புரிந்து வந்துள்ளமை விசாரணைகளில் இருந்து தெரியவந்திருப்பதாக வத்தளைப் பொலிஸார் தெரிவித்தனர். (01)

# உள்ளூராட்சி தேர்தல் நடத்துவது குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரிக்கை!

(கொழும்பு)

ஏப்ரல் 23 ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான சூழ்நிலை காணப்படுகிறதா என்பது தொடர்பாகத் தனக்கு அறிக்கையொன்றை விரைவில் சமர்ப்பிக்குமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க, வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கான மாவட்ட செயலாளர்களிடம் கோரியுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இருக்கும் 53 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை எதிர்வரும் 23 ஆம் திகதி நடத்துவதற்குத் தீர்மானித்திருப்பதாகத் தெரிவித்த உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தலுக்கான பிரதி ஆணையாளர் டபிள்யூ.பி .சுமணசிறி -

கடந்த 2002 ஆம் ஆண்டு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நடைபெறவிருந்த உள்ளூராட்சி தேர்தல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேண்டுகோளுக்கமைய 2003 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. தற்போது இந்தத் தேர்தலை எதிர்வரும் 23 ஆம் திகதி நடத்துவதற்கு தேர்தல் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதேவேளை வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு முன்னர், விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார். (01)




நேற்றுமுன்தினம் நடைபெற்ற யாழ்.வைத்தீஸ்வரா கல்லூரியின் கவின் கலை மன்றத்தின் 'லலித மஞ்சரி' நூல் வெளியீட்டு விழாவில்- கவின்கலை மன்றப் பொறுப்பாசிரியர் வான்மதி ரவீந்திரன் உரையாற்றுவதையும் - கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் வா.ஜெயரட்ணம் நூலின் பிரதியொன்றைப் பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம்.

# சமநிலையை நோக்கி நகருகின்ற நியூஸிலாந்து - இலங்கை டெஸ்ட்!








(நேப்பியர்)

நியூஸிலாந்து அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி முதல் இனிங்ஸில் 498 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தது.

மூன்றாம் நாள் ஆட்டநேரமுடிவில் 3 விக்கெட் இழப்புக்கு 351 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்த இலங்கை அணி நேற்று தொடர்ந்து ஆடியது.

சதமடித்திருந்த ஜெயவர்த்தனவும், சமரவீரவும் தொடர்ந்து ஆடி ஓட்டங்களைக் குவித்தனர். இதனால் அணியின் ஸ்கோர் உயர்ந்து 407ஐ எட்டியது.



அந்தவேளையில் - பிராங்ளினின் பந்துவீச்சில் ஜெயவர்த்தன ஆட்டமிழந்தார். அவர் 243 பந்துகளில் 19 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 141 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து சமரவீரவுடன் டில்ஷான் இணைந்தார். இவர்கள் இருவரும் இணைந்து அணியின் ஸ்கோரை 452இற்கு உயர்த்தியபோது, அடுத்த விக்கெட்டை மாட்டின் வீழ்த்தினார்.

28 ஓட்டங்களுடன் நின்ற டில்ஷான் ஆட்டமிழந்தபின்னர் - வாஸ் களமிறங்கினார். இதற்கிடையில் ஸ்கோர் 463ஐ எட்டியபோது - திலான் சமரவீர 88 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். மாட்டினின் பந்துவீச்சில் பிளெமிங்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்த இவர் 166 பந்துகளில் 14 பவுண்டரிகளுடன் 88 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

இவரையடுத்து வாஸ் - ஹேரத் ஜோடி இணைந்தது. ஆனால் துரதிஷ்டமாக வாஸ் 17 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க இலங்கை அணி அடுத்தடுத்து ஹேரத், குலசேகர, மாலிங்க ஆகியோரின் விக்கெட்டுக்களை ஓட்டமெதையும் பெறாமல் இழந்தது.


கடைசிவரை சந்தன ஆட்டமிழக்காமல் 19 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

இலங்கை அணி முதல் இனிங்ஸில் 498 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் மாட்டின் மற்றும் பிராங்ளின் ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களையும், வைஸ்மன் மற்றும் அஸ்ரில் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதையடுத்து நியூஸிலாந்து அணி - இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடியது.

அணியின் ஸ்கோர் 51ஆக உயரும்வரை விக்கெட் இழப்பு ஏற்படவில்லை. முதல் விக்கெட்டாக கமிங் 16 ஓட்டங்களுடனும், மார்ஷல் 6 ஓட்டங்களுடனும் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தனர்.



நியூஸிலாந்து அணி 2 விக்கெட் இழப்புக்கு 64 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் நான்காவதுநாள் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

போட்டியின் இறுதிநாள் இன்று என்பதால் - ஆட்டம் வெற்றிதோல்வியின்றியே முடியுமென எதிர்பார்க்கப் படுகிறது.

## பழமையான விளையாட்டு வீரர் பேய்ன்டர் கனடாவில் காலமானார்

உலகிலேயே பழமையான விளையாட்டு வீரர் ஹென்றி பேய்ன்டர் சீனியர் கடந்தமாதம் 30ஆம் திகதி காலமானார். அவருக்கு வயது 98.

கனடாவைச் சேர்ந்த பேய்ன்டர், மாரடைப்பால் உயிரிழந்ததாக அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

2 ஆண்டுகளுக்கு முன்பு கனடா முழுவதும் நடைபெற்ற முக்கிய பட்மின்ரன் போட்டிகள் அனைத்திலும் பங்கேற்றுள்ளார். இதையடுத்து அந்த ஆண்டின் கின்னஸ் சாதனையாளர் புத்தகத்தில் போட்டிகளில் பங்கேற்கும் பழமையான விளையாட்டு வீரர் என்ற சிறப்பை அவர் பெற்றார்.

3 வாரங்களுக்கு முன்பு மாரடைப்பு ஏற்பட்ட பின்புங்கூட, சமீபத்தில் ஈஸ்டர் விழாவைக் கொண்டாடும்விதமாக நண்பர்களுடன் ஒரு போட்டியில் பங்கேற்க அவர் கேட்டுக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

## 2 ஆவது டெஸ்டிலும் பொலக் ஆடமாட்டார்!

(ஜொகனஸ்பேர்க்)

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் தென்னாபிரிக்க வீரர் பொலக் ஆடமாட்டாரென அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி தற்போது மேற்கிந்தியத் தீவில் சுற்றுப்பயணம் செய்துள்ளது. நடந்து முடிந்த முதல் டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிந்தது. முழங்கால் வலி காரணமாக முதல் டெஸ்ட் போட்டியில் பொலக் ஆடவில்லை.

இன்னும் அவர் முழுமையாகக் குணமடையாத காரணத்தால் இன்று முதல் நடைபெறவுள்ள 2ஆவது டெஸ்ட் போட்டியிலும் பொலக் ஆடமாட்டார். தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளரான பொலக் அணியில் இடம்பிடிக்காதது பந்துவீச்சில் பலவீனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதுவரை 93 டெஸ்ட் போட்டிகளில் ஆடியுள்ள பொலக் 377 விக்கெட்டுக்களைச் சாய்த்துள்ளார். தென்னாபிரிக்க கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுக்கள் சாய்த்து சாதனை படைத்துள்ள பொலக் கடைசி டெஸ்ட் போட்டியில் ஆட வாய்ப்புள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு முன்னதாக உள்ளூர் போட்டியில் பொலக் தனது உடற்தகுதியை நிரூபிக்கவேண்டும் என்று தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை கருத்துத் தெரிவித்துள்ளது. ஏப்ரல் 21ஆம் திகதி கடைசி டெஸ்ட் நடைபெறவுள்ளது.

## உதைபந்தாட்டப் போட்டி

எல்லைப்படை மாவீரர் ஞாபகார்த்தமாக சுனாமி தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காக யாழ். மாவட்ட தமிழீழ விளையாட்டுத் துறையின் ஆதரவுடன் வலிகாம உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இன்றைய காலிறுதிப் போட்டியில் மாலை 4 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்லஸ் விளையாட்டுக் கழகமும் மாலை 5 மணிக்கு அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கிளி.ஸ்கந்தா விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

## ராஞ்சி விமானநிலையமருகே பாகிஸ்தான் வீரர்கள் மீது கல்வீச்சுத் தாக்குதல்!

(ஜாம் ஷெட்பூர்)

இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடிவரும் பாகிஸ்தான் அணி - மூன்றாவது போட்டிக்காக ஜாம் ஷெட்பூருக்குச் சென்றுகொண்டிருந்த போது ராஞ்சி விமானநிலையம் அருகே கல்வீச்சு நடத்தப்பட்டது.

மூன்றாவது போட்டி ஜார்க்கண்ட் மாநிலம் ஜாம் ஷெட்பூரில் நாளை நடைபெறவுள்ளது.

இதற்காக இருஅணி வீரர்களும் நேற்று முன்தினம் விசாகப் பட்டினத்திலிருந்து ஜாம் ஷெட்பூர் சென்றனர். அங்கு விமானநிலையம் இல்லாததால் ராஞ்சிக்குச் சென்றனர்.

ராஞ்சி விமான நிலையத்திலிருந்து நேற்று முன்தினம் மாலை பாகிஸ்தான் வீரர்கள் 135 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள ஜாம் ஷெட்பூருக்கு பஸ்ஸில் புறப்பட்டனர். அப்போது விமான நிலையம் அருகே நின்ற ஏராளமான ரசிகர்களில் ஒருவர் பாகிஸ்தான் வீரர்கள் சென்ற பஸ் மீது கல்வீசினார். இதனால் பஸ் கண்ணாடி நொருங்கியது.

இதன்போது ஜன்னல் ஓரமாக இருந்த பாகிஸ்தான் கப்டன் இன்ஸமாம் அதிஷ்டவசமாகத் தப்பினார். இதனால் அவர் மிகவும் அதிர்ச்சியடைந் தார்.

பாகிஸ்தான் வீரர்கள் நேற்றுக் காலை பயிற்சியில் ஈடுபடவிருந்தனர். கல்வீச்சுச் சம்பவத்தைத் தொடர்ந்து வீரர்களை நேற்று ஓய்விலிருக்குமாறு இன்ஸமாம் கூறினார். அவர்கள் ஹோட்டல் அறையிலேயே அடைந்து கிடந்தனர். இன்று அவர்கள் பயிற்சி ஆட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

ஒருநாள் போட்டியின் பயண ஏற்பாடுகளால் பாகிஸ்தான் ஏற்கனவே அதிருப்தியில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு

## விஸ்டன் விருதுக்கு 5 இங்கிலாந்து வீரர்கள்!

இந்த ஆண்டுக்கான விஸ்டன் கிரிக்கெட் வீரர்கள் விருதுக்கு இங்கிலாந்தைச் சேர்ந்த 5 வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். லண்டனில் புதன்கிழமை இதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது.

தேர்வு பெற்றுள்ள வீரர்கள் ஆஷ்லே ஜைல்ஸ், ஸ்ரீவ் ஹார்மிசன், ரொபேர்ட் கீ, அன்ட்ரூ ஸ்ரரஸ், மார்கஸ் ட்ரெஸ்கொதிக். இம்மாதிரி ஒரே நாட்டிலிருந்து 5 வீரர்கள் தெரிவு பெறுவது 45 ஆண்டுகால விஸ்டன் விருது வரலாற்றில் இதுவே முதல் முறையாகும்.

இங்கிலாந்து அணி தொடர்ந்து 8 டெஸ்ட் போட்டிகளில் வெற்றிபெற்றதற்கும், ஐ.சி.சி குழு தரவரிசைப் பட்டியலிலும் 2ஆவது இடத்துக்கு இங்கிலாந்து உயர்ந்துள்ளதற்கும் இந்த வீரர்கள் காரணமாகத் திகழ்ந்துள்ளனர்.

அத்துடன் இங்கிலாந்திலிருந்து வழங்கப்படும் விஸ்டன் விருதில் வெளிநாட்டு வீரர்கள் ஆதிக்கம் செலுத்திவந்ததும் இவர்களால் முடிவு பெற்றுள்ளது. கிரிக்கெட் திறனின் உரைகல்லாக விஸ்டன் கருதப்படுகிறது.

## இறுதி இரண்டு போட்டிகளிலும் பாகிஸ்தான் அணியில் அக்தர்!



(லாகூர்)

இந்தியாவுடனான கடைசி 2 ஒருநாள் போட்டிகளிலும் பாகிஸ்தான் அணியில் அக்தர் விளையாடுவாரென அறிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலிய பயணத்தின் பாதியில் தாயகம் திரும்பிய அக்தர் காயம் காரணமாக இந்திய பயணத்திலிருந்து விலகினார். அவர் தற்போது முழு ஓய்வில் இருக்கிறார். தொடர்ந்து இந்திய மண்ணில் தோல்வி கண்டு வருவதால் கடைசி 2 போட்டிகளிலும் அக்தரை ஆடச்செய்ய பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முடிவு செய் திருக்கிறது.

இதன் ஒரு பகுதியாக அவரிடம் உடல் தகுதி சோதனை நடத்த முடிவுசெய்யப்பட்டுள்ளது. முதல்கட்டமாக அவரை உள்ளூர் போட்டிகளில் ஆடவைக்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முனைப்புடன் காத்திருக்கிறது.

எதிர்வரும் 10 ஆம் திகதி நடக்கும் உள்ளூர் போட்டியில் அக்தர் களமிறங்க காத்திருக்கிறார். இந்தப் போட்டியில் அக்தர் மற்றும் ஷபீர் ஆகியோரின் உடல் தகுதியை தீர்மானிக்க நிபுணர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நிபுணர் கொடுக்கும் அறிக்கையின் அடிப்படையில் வீரர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முடிவுசெய்திருக்கிறது.

இது தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தேர்வுக் குழு தலைவர் வாசிம் பாரி நிருபர்களிடம் கூறுகையில் -

இந்தியாவுக்கு எதிரான கடைசி 2 போட்டிகளில் அக்தர் மற்றும் ஷபீர் ஆகியோர் ஆட வாய்ப்புள்ளது. இதன் காரணமாக உள்ளூர் போட்டிகளில் அவர்கள் ஆடவுள்ளனர் எனத் தெரிவித்தார்.



# நியாப் அபிவிருத்தித் திட்டங்களுக்கு 25 கிராமங்கள் தெரிவாகியுள்ளன

(யாழ்ப்பாணம்)

நியாப் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக யாழ். மாவட்டத்தில் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக - 25 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு, அங்கு சமூக வலுவூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

நியாப் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட கிராமங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு -

ஊர்காவற்துறை பிரதேச செயலர் பிரிவில் நாரந்தனை தெற்கு, கரைநகர் பிரதேச செயலர் பிரிவில் பிட்டியெல்லை. வேலணை பிரதேச செயலர் பிரிவில் நயினாதீவு தெற்கு, யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் நெடுங்குளம். நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் கோண்டாவில் வடகிழக்கு. சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நவாலி கிழக்கு, சில்லாலை. சங்கானை பிரதேச செயலர் பிரிவில் வட்டு தெற்கு, வண்ணாபுரம். உடுவில் பிரதேச செயலர் பிரிவில் குப்பிளான் தெற்கு, சங்குவேலி. தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவில் கல்லாரை.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வாதரவத்தை, செல்வபுரம், புத்தூர் கிழக்கு.

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் மட்டுவில், கரம்பைக்குறிச்சி, குடமியன், கைதடி கிழக்கு, வெள்ளாம் போக்கட்டி. கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் கரணவாய் வடக்கு, சமரபாகு.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் கெருடாவில் தெற்கு. மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் செம்பியன்பற்று தெற்கு.

தெரிவு செய்யப்பட்டுள்ள இந்தக் கிராமங்களில் கிராம அபிவிருத்தித் திட்டங்கள், கிராமிய விவசாய அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, அவற்றின் மூலம் கிராமிய வீதிகள் புனரமைத்தல், குடிநீர் கிணறுகள் அமைத்தல் மற்றும் பொது மண்டபங்கள் அமைத்தல் போன்றன மேற்கொள்ளப்படவுள்ளன.

அத்துடன் குறிப்பிட்ட கிராமங்களில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அவர்களுடைய வருமானத்தைப் பெருக்கும் நோக்குடன் - சுழற்சிமுறையிலான கடன்திட்டங்களும், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஊடாக வழங்கப்படவுள்ளன.

இதற்காக இரண்டு கிராமங்களுக்கு ஒருவர் வீதம் சமூக வலுவூட்டாளர்கள் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டு நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

## ஆண்டு விழாவும், பரிசளிப்பு நிகழ்வும்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலையின் நான்காவது ஆண்டுவிழாவும், பரிசளிப்பு நிகழ்வும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு மருதடி விநாயகர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

ஜெயந்தினி ஆறுமுகராசா தலைமையில் நடைபெறும் இந்த விழாவுக்கு- சமயச் சொற்பொழிவாளரும், ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் உப அதிபருமாகிய ஆறு. திருமுருகன் பிரதம விருந்தினராகவும், மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலய அதிபர் தி. அருட்பிரகாசம்பிள்ளை, மொமோறியல் ஆங்கிலப் பாடசாலை அதிபர் வேணுகா சண்முகரத்தினம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (101)

# இளைஞனைக் காணவில்லையென மனித உரிமைக் குழுவில் முறைப்பாடு

இளைஞன் ஒருவரைக் காணவில்லை என நேற்று முன்தினம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மணல்லேன் பருத்தித்துறையைச் சேர்ந்த பாலகிருஸ்ணன் ரகுலேஸ்வரன் (வயது 17) என்ற இளைஞனே காணாமற் போயுள்ளதாக அவரது தந்தையாரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறையில் உள்ள சைக்கிள் கடை ஒன்றில் வேலை செய்யும் இவர் - கடந்த 30 ஆம் திகதியன்று வெளியே போவதாகக் கூறிச்சென்றதாகவும் இன்னமும் வீடு திரும்பவில்லை எனவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

# 240 மாணவர்களுக்கு ரீடோ நிறுவனம் கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

சாவற்கட்டிலுள்ள மாணவர் முன்னேற்ற நிலையத்தில் மாலை நேரக் கல்வி கற்கும் சுமார் 240 மாணவர்களுக்கு - ரீடோ நிறுவனத்தினரால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மாணவர் முன்னேற்ற நிலையத்தில் ரீடோ நிறுவனத்தின் மீளாய்வு கண்காணிப்பு உத்தியோகத்தர் ந.சிறிகாந்த் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சுப்பிரமணியசர்மா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இதில் ரீடோ நிறுவனத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் தி. ஜெய்க்குமார் தலைமையுரையையும், பிரதேச செயலர் சுப்பிரமணியசர்மா சிறப்புரையையும் நிகழ்த்தினர்.

தொடர்ந்து பிரதம விருந்தினரால் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (44)

# பொது எழுதுநர் II 'ஆ' பதவிக்கு நியமனம் பெற்றோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

பொது எழுதுநர் - II 'ஆ' பதவிக்கு புதிதாக நியமனம் செய்யப்பட்டவர்களில் 10 பேர் யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள் உதவி அரச அதிபர் பணிமனைகளில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி - க. விநோதினி (சண்டிலிப்பாய்), அ. வசந்தராணி (உடுவில்), சி. தேவமனோகரி (சங்காணை), சி. சிவஜனனி (சங்காணை), இ. ரேணுகா (வேலணை), பா. ஸ்ரீ கௌரி (சாவகச்சேரி), க. சாம்பவி (சாவகச்சேரி), திருமதி எஸ். சித்திரா (சாவகச்சேரி), பே. கஸ்ரோ (மருதங்கேணி), தி. பிரகாஸ் (மருதங்கேணி).

கடந்த 5.4.2005 முதல் இவர்கள் தத்தமது கடமையைப் பொறுப்பேற்குமாறு யாழ். அரச அதிபர் கே. கணேஷ் சம்பந்தப்பட்டவர்களுக்கு கடிதமூலம் அறிவித்துள்ளார். (24)

# பீப்பிள்ஸ் லீசிங் கம்பனியின் யாழ். கிளை திறப்பு விழா!

மக்கள் வங்கியின் முழு உரித்துடைய பீப்பிள்ஸ் லீசிங் கம்பனி லிமிட்டெட்டின் இன் யாழ்ப்பாணத்துக்கான புதிய கிளை - யாழ்ப்பாணம் கன்னாதிட்டி வீதியில் நாளை காலை 11 மணியளவில் மக்கள் வங்கியின் பொது முகாமையாளர் ரி. கருணாசேனவால் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் அசோக் லேலைண்ட் கம்பனியின் பொது முகாமையாளர், பீப்பிள்ஸ் லீசிங் கம்பனியின் பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் ஊழியர்களும் கலந்துகொள்வர்.

இதன்மூலம் ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் மக்கள் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருந்த வாகனங்களுக்கான லீசிங் வசதி மற்றும் வாடகைக் கொள்வனவு வசதி என்பன மக்கள் வங்கியின் வாடிக்கையாளர் அல்லாதோருக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளது.

இந்த அரிய சந்தர்ப்பத்தை அனைவரும் பயன்படுத்திக் கொள்ளுமாறு மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் ரி. கே. ஆனந்தராஜா தெரிவித்தார்.

# அவசர நோயாளர் சேவைக்கென நெடுந்தீவுக்கு அம்புலன்ஸ் படகு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மக்களில் அவசர நோயாளர் சேவைக்கென - கியூ மெடிக்கா நிறுவனத்தினரால் புதிய அம்புலன்ஸ் படகு ஒன்று கட்டப்படுவதாகத் தெரியவருகிறது.

நெடுந்தீவு மக்களுக்கென மாத்திரம் அமைக்கப்படும் இந்தப் படகு - இன்னும் மூன்று மாதங்களுக்குள் நோயாளர் சேவையில் ஈடுபடவுள்ளதுடன், அதற்கான வேலைகள் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை நெடுந்தீவு, அனலைதீவு, மருதங்கேணி போன்ற பிரதேசங்களில் கடமையாற்றும் வைத்தியர்களுக்கு சம்பளம், மேலதிகநேரக் கொடுப்பனவு என்பவற்றுடன் - மேலதிகக் கொடுப்பனவு ஒன்றும் இந்தமாதம் முதல் வழங்கப்படவுள்ளதாகவும், இந்த நடவடிக்கை மூலம் வைத்தியர்களது சேவையைப் பெறக்கூடியதாக இருக்குமெனவும் அண்மையில் நெடுந்தீவு வந்திருந்த யாழ். மாவட்ட பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (113)

## 'கூட்டுறவு கருவூலங்கள்' வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை வெளியிடும் முன்னாள் பிராந்தியக் கூட்டுறவுக் கல்லூரி அதிபர் இ. சுப்பிரமணியம் எழுதிய கூட்டுறவுக் கருவூலங்கள் நூல் வெளியீட்டு விழா நாளை காலை 10 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ. கனகசபாபதி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் இ. இளங்கோவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

## சேவைநயப்பு வைபவம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் தலைவராகவும், பரீட்சைச் செயலாளராகவும் சிறப்பாகப் பணியாற்றிய சைவப்புலவர் வல்லிபுரம் கந்தசாமியின் சேவையைக் கௌரவிக்கும் நோக்கில் - யாழ். மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவால், இன்று பிற்பகல் 3.30 மணிக்கு குழுவின் தலைவர் கலாநிதி க. குணராசா தலைமையில் மாநகர ஆணையாளரில் அலுவலகத்தில் பாராட்டு வைபவம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை மூன்று



பெயர் : ய. ஸரணிகா
முகவரி : புங்குடுதீவு.

அகவை ஐந்து



பெயர் : வ. ஷாருஜன்
முகவரி : டென்மார்க்.

அகவை பத்து



பெயர் : செ. ஜெறின்
முகவரி : இளவாலை.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..........
முகவரி : ..........
பிறந்த ஆண்டு : ..........

கூப்பன்கள் பத்தும் புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

..........
பெற்றோர் ஒப்பம்

# சின்னஞ்சிறு செய்திகள்

## சந்நிதியில் கலை நிகழ்வுகள்

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமைதோறும் இடம்பெற்று வரும் கலை நிகழ்ச்சிகள் தொடரில் இன்று முற்பகல் 10.30 மணியளவில் பாடசாலை மாணவர்களின் நிகழ்ச்சியாக இணுவில் இந்துக் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (14)

## பொதுசன உதவிப்பணம் வழங்கப்படவுள்ளது

தென்மராட்சி பிரதேச செயலகத்தினூடாக பொதுசன மாதாந்த உதவிப் பணம், புற்றுநோய், காசநோய்க்கான உதவிப் பணம், தொழுநோய்க்கான உதவிப் பணம், பெறுபவர்களது ஏப்ரல் மாதக் கொடுப்பனவுப் பட்டியல்கள் - அந்தந்தப்பகுதி தபாலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இவர்கள் தமக்கான கொடுப்பனவை எதிர்வரும் திங்கள் முதல் பெற்றுக்கொள்ளலாம் என பிரதேச செயலக சமூகசேவைப் பகுதியினர் அறிவித்துள்ளனர். (24)

## வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கு கொடுப்பனவு

ஜி. ரி. இசற் நிதியுதவியுடன் தென்மராட்சி பிரதேசத்தில் அமைக்கப்பட்டுவரும் 175 வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கு, தொழிலாளர் கூலியாக 22 ஆயிரத்து 50 ரூபா வீதம் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

மூலப்பொருட்கள் யாவும் பயனாளிகளுக்கு ஜி. ரி. இசற் நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளன.

11 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 175 பயனாளிகளுக்குமான கொடுப்பனவு - கடந்த புதன்கிழமை பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது. (24)

## வலிகாமம் வலய ஆசிரியர்களுக்கு

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட தரம் 6 இல் சுற்றாடல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும், தரம் 7 - 11 வரை விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குமான தரவட்டம் நிகழ்வு - நாளை காலை 8.30 தொடக்கம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக வலிகாமம் கல்வி வலய விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர் தெரிவித்தார்.

இதில் பங்குபற்றும் ஆசிரியர்கள் நடந்து முடிந்த தவணைப் பரீட்சையின் வினாத்தாள், விடைத்தாள் பகுப்பாய்வு என்பனவற்றைக் கொண்டுவருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (101)

## கோபுரத் திருப்பணி ஆரம்ப நிகழ்வு

(துன்னாலை)

துன்னாலை வடக்கு புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் மேற்கு வாயில் கோபுரத் திருப்பணி ஆரம்ப நிகழ்வு - எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் இ. அன்னலிங்கம் தலைமையில் இடம் பெறும்.

மூன்று தளங்களைக் கொண்ட 31 அடி உயரமாக அமைக்கப்படவுள்ள திருக்கோபுரத்தில் 25 விக்கிரகங்கள் உள்ளடக்கப்படவுள்ளன. இந்தத் திருக்கோபுர திருப்பணிகளை இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட சிற்பாச்சாரியார் சோமஸ்கந்தன் குழுவினர் மேற்கொள்ளவுள்ளனர். (14)

## 'தெரிதல்' இதழ் வெளியாகியது

(கொக்குவில்)

அ. யேசுராசாவின் 'தெரிதல்' எட்டாவது இரு திங்கள் இளைய தலைமுறைக்கான கலை இலக்கிய இதழ் வெளிவந்துள்ளது.

அவசர காலத்துக்கேற்றவாறு வாசித்து முடிக்கவும், அதேவேளை வாசித்தபின் சரியான பக்கத்தைச் சுட்டிக்காட்டும் விதமான படைப்புகள் இந்த இதழில் வெளிவந்துள்ளன. (206)

## கலாசார மண்டப புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

(கொக்குவில்)

நிவாரணம் புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சால் 2005 ஆம் ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சாவகச்சேரி கலாசார மண்டபப் புனரமைப்புக்காக ரூபா 5 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலகத்தினர் இந்த மண்டபப் புனரமைப்புக்கான வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர். (24)

## மஹா கும்பாபிஷேகம்

(அரியாலை)

அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் கோயில் மஹா கும்பாபிஷேக கிரியா கால நிகழ்வுகள் கடந்த புதன்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. நாளை பக்தர்கள் எண்ணைக்காப்பு சாத்துதல் இடம்பெறுவதோடு, ஞாயிற்றுக்கிழமை காலை கும்பாபிஷேக நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

இந்தக் கும்பாபி ஷேக நிகழ்வுகள் சிவஸ்ரீ சங்கரராஜக் குருக்கள் தலைமையில் இடம்பெற்றுவருகின்றன. (31)




# முடிவை நோக்கி...

சுதந்திரமும், ஜனநாயகமும் நிலவும் இந்தக் காலகட்டத்தில் பெண்களும் கூட சுதந்திரக்காற்றை அனுபவிக்க வேண்டும் என்று விரும்புவதில் வியப்பேதுமில்லை. பல நூற்றாண்டுகளாக ஆண்களின் கொடுங்கோலுக்கு அவர்கள் ஆட்பட்டுக் கிடந்தார்கள் என்பது உண்மைதான். இதன்விளைவாக அவர்களது ஆற்றல் வெளிப்பட வழி இல்லாமலே போய்விட்டது. மனிதர்களாகிய நாம் முட்டுக்கட்டைகளை நாமே ஏற்படுத்திக்கொண்டு, பின்னர் அதற்காகப் புலம்புவது வழக்கமாகிவிட்டது. உலக மக்கள் தொகையில் கால் பங்கினர் இன்னமும் எழுத்தறிவற்றவராகவே இருக்கிறார்கள். எழுத்தறிவு பெற்றவர்களில் தொண்ணூறு சதவீதமானோர் தாங்களாகவே ஏற்படுத்திக் கொண்ட தளைகளாலும், மூடநம்பிக்கைகளாலும் கட்டுப்படுத்திக் கொண்டு உருப்படியாக செயற்படுவதற்குத் தெரியாதவர்களாக இருக்கிறார்கள். மனித ஆற்றலை எவ்வளவு தூரத்துக்குப் பயன்படுத்திக்கொள்ள முடியுமோ, அதன்ஒரு சிறு பகுதியைக்கூட நாம் இன்னும் தொட்டுப்பார்க்கவில்லை.

மூட நம்பிக்கைகளுக்கு இடம் கொடுத்ததன் விளைவாக வளர்ச்சி பெறமுடியாமல், ஆண்கள் தங்களையே கட்டுப்படுத்திக்கொண்டதோடு, தாங்கள் அடைந்துள்ள நிலையைக்கூடப் பெண்கள் அடைவதற்கு அனுமதிக்கவில்லை. வேறுவிதமாகச் சொல்வதாயின், மனித இனம் என்ற வாகனம் இரண்டு சக்கரங்களில் வெவ்வேறு திசையில் போய்க்கொண்டிருக்கிறது. ஆண், பெண் ஆகிய இருபாலாரும் அவரவர்க்குரிய வழியில், முழுவளர்ச்சி பெறுவதற்கு எந்த விதத் தடையுமின்றி அனுமதித்தோமானால், நமது வாழ்க்கை எவ்வளவு தூரம் மாறி இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கலாம்.


பொருளாதார ரீதியில் தங்களுக்கு சுதந்திரம் வேண்டும் என்பதற்காகத் தான் பெண்கள் வீட்டைவிட்டு வெளியே சென்று வேலைக்குப் போகிறார்கள். இது முக்கியமான காரணங்களில் ஒன்றாகும். பொருளாதார சுதந்திரம்இல்லாத போது, அவர்கள் பெரும்பாலும் வீட்டு அடிமைகளாகவே இருக்கிறார்கள். ஒரு பெண் திருமணம் செய்து கொண்டதும் தன்னுடைய சொந்த உரிமைகளைப் பறி கொடுத்து விடுவது இல்லை. அவ்வாறு செய்யவும் கூடாது என்பது நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய முக்கியமான விடயமாகும்.

தன்னுடைய தனித்தன்மையையும் அவள் விட்டுக் கொடுக்கக்கூடாது. திருமணம் என்பது சுதந்திரமாக இருவர் சேர்ந்து வாழத் தொடங்குவதாகும். ஒருவரோடு ஒருவர் கலந்து ஒன்றாகி விடுவது இல்லை. பெண்மணந்து கொண்டதுமே தன் பெயரையே இழந்து விடுகிறார் என்றது வருத்தம்தரும் விடயம் தான். உரிமைகளையும் இழந்து விடுவது தாங்கமுடியாத துயரமாகும். ஸ்பெயின் நாட்டில் ஓர் ஆண் ஒரு பெண்ணை மணந்து கொண்டதும், அவளுடைய பெயரையும் தன்னுடன் சேர்த்துக் கொள்கிறான். இங்கே பெண் - ஆணுடைய பெயரைச் சேர்த்துக் கொண்டாலும், பொருளாதார சுதந்திரம் இல்லாமல் ஒரு பெண் தன்னு டைய தனித் தன்மையைக் காப்பாற்றிக் கொள்வது முடியாத செயல்.

சில பெண்கள் தங்கள் இல்லத்தையே ஆலயமாகக் கருதுகின்றார்கள். அதனைப் பேணிக் காப்பதே பெருமை என்று எண்ணி, அதில் மகிழ்ச்சி அடைகிறார்கள். மிக உயர்ந்த பதவி வகிக்கக்கூடிய கல்வித் தகுதி பெற்றவர்கள் சிலர்கூட, இவ்வாறு இருக்கிறார்கள். வீட்டில் ஒரு பெண் செய்ய வேண்டி இருக்கும் வேலைகள் பல வகைப்பட்டவை; ஏராளமானவை; அதிக நேரம் எடுத்துக்கொள்பவை. அதற்கான ஒரு முக்கியமான ஊதியத்தை அவளுடைய சொந்தச் செலவுக்கென கொடுப்பது சரியாக இருக்கும். இவ்வாறு கொடுக்கும் ஊதியத்தால் அவள் பொருளாதர சுதந்திரத்தைப் பெறுவாள்.

வெளியே போய் வேலை பார்த்து சம்பாதிக்கும் பணம் வீட்டிலேயே கிடைத்து விடுவதால், சிறந்த இல்லத்தரசியாகத் திகழ முடியும். இந்த நிலை ஏற்படும் பொழுது ஏராளமான பெண்கள் வேலைகளைத் தேடி அலைவதைத் தவிர்க்க முடியும். வீட்டு நிலைமை சீர்பட உதவும். தாங்கள் சம்பாதிப்பதால் குடும்ப வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள முடிகிறது என்று பல பெண்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

உண்மையில் - ஒவ்வோர் அம்சமாக ஆராய்ந்து பார்த்தோமானால், ஒரு பெண் சம்பாதித்துக் கொண்டு வரும் தொகையைவிட குடும்பத்தில் ஏற்படும் நஷ்டம் தான் அதிகமாக இருக்கும். *(தொடரும்...)*



# குழந்தைகள் சாப்பாட்டில் பிடிவாதமா?



குழந்தைகள், சாப்பிடமாட்டேன் என்று பிடிவாதம் பிடிப்பதற்குக் காரணமே பெற்றோர்கள்தான் என்கிறார்கள் குழந்தை நல மருத்துவ நிபுணர்கள்.


நாம் நம் நேரத்துக்குத் தகுந்தாற் போலும், நம் விருப்பத்துக்கேற்பவும் குழந்தைகளுக்கு கட்டாயப்படுத்தி ஊட்டுகிறோம். அதனால் குழந்தைகளுக்குச் சாப்பாடு மீது வெறுப்பு உண்டாகிறது. அதனால் சில குழந்தைகள் இது வேண்டாம், அது வேண்டாம் என ஒதுக்கி, சாப்பிடமாட்டேன் என்கின்றனர். இதனால் அடம் பிடிக்கும் பழக்கந்தான் அதிகமாகிறதே தவிர, விரும்பிச் சாப்பிடுவதில்லை.

முதலில் எல்லாத் தாய்மார்களுக்கும் தம் குழந்தைகள் எப்போதுமே சாப்பிடுவ தில்லை, சாப்பிட அடம்பிடிக்கின்றனர் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை அதி கம்.

நிஜமாகவே அவர்கள், அவர்களுக்குத் தேவையானளவில் சாப்பிட்டிருந்தாலும் அவர்கள் சாப்பிடுவது போதவில்லை என்ற நினைப்பு அதிகம். ஏன் ஒருவேளை மற்றவர்களின் கண் தன் குழந்தைமீது பட்டுவிடும் என்ற பயம். அல்லது பெற்ற தாயே தன் குழந்தை சாப்பிடுவதைச் சொல்லக் கூடாது என்ற எண்ணமா? தெரியவில்லை? யோசித்துப் பாருங்கள். ஒரு குழந்தை ஒரு நாளில் எத்தனை தடவைகள் சாப்பிடும்? நான்கு மணி நேரத்துக்கு ஒருமுறை கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளதே தவிர, ஒவ்வொரு குழந்தைக்கும் ஜீரணிக்கும் சக்தி மாறுபடும் என்பதை உணர்வதில்லை. அதற்காகத் தாம் நினைக்கும் நேரத்தில், தாம் சாப்பிடுவதை குழந்தைகளும் சாப்பிட வேண்டும் என்று நினைக்கக்கூடாது. அதனால் அது சாப்பிடுவதேயில்லை எனக் கட்டாயப்படுத்தி பாலூட்டினாலோ, சாப்பிட வேறேதாவது கொடுத்தாலோ அது வாந்தி எடுக்கத்தான் செய்யும். இதற்குக் காரணம் நம் அவசரம்தானே தவிர, எந்தக் குழந்தையும் எனக்கு இது பிடிக்கவில்லை, அது பிடிக்கவில்லை எனக் கூறுவதில்லை. ஆனால் தன் குழந்தை சாப்பிடவே மாட்டேன் எனச் சொல்லிக் கொண்டிருப்பது மத்திய மற்றும் உயர்மட்டப் பெற்றோர்கள்தான். குழந்தைகளுக்கு என்ன தெரியும்? நாம் என்ன சாப்பாடு செய்து கொடுக்கிறோமோ அதைக் கட்டாயப்படுத்தாமல் கொடுத்தாலே சாப்பிடுகிறது.

குழந்தைப் பருவத்தில் இது வேண்டும், அதுவேண்டும் எனக் கேட்பதில்லை. குழந்தை ஏதோ ஒரு காரணத்தினால் அழுதால்கூட, அது பசிக்கிறது என்றுதான் அழுகிறது என்று அதற்கு பிஸ்கட், பால் போன்றவற்றை மாற்றி மாற்றி எதையாவது கட்டாயப்படுத்தித் திணித்தாலும், வாந்தி எடுக்கத்தானே செய்யும்? அது எப்படி சமிபாடடையும். எனவே குழந்தைகளுக்கு உணவைத் திணித்துக் கொடுக்காதீர்கள்.

# மஞ்சள் கருவுக்கு பச்சைக்கொடி



முட்டை சாப்பிட்டால் கொழுப்பு அதிகரித்துவிடும் எனப் பலரும் அஞ்சுகின்றனர். அவர்கள் இனிமேல் பயமின்றி முட்டை சாப்பிடலாம். முட்டை என்று இங்கு சொல்லப்படுவது முட்டையின் மஞ்சள் கருவையே.

மஞ்சள் கருவை உள்ளடக்கிய முட்டையில் 'கொலஸ்ரோல்' அதிகளவில் இருப்பது பலருக்கும் தெரியும். முட்டையின் மஞ்சள் கரு ஒவ்வொன்றிலும் 210 மில்லிகிராம் கொலஸ்ரோல் இருக்கிறது.

ஆனால் மஞ்சள் கருவிலுள்ள 210 மில்லிகிராம் கொலஸ்ரோலும் நம் உடலில் ஒட்டுவதில்லை. காரணம்-இயற்கையாகவே நமது ஜீரண உறுப்புகள், முட்டையைப் போன்ற மித மிஞ்சிய கொலஸ்ரோலில் கொஞ்சக் கொலஸ்ரோலை மட்டும் உறிஞ்சிக் கொண்டு, மீதமுள்ள பெரும்பகுதி கொலஸ்ரோலை அப்படியே புறக்கணித்து வருகிறது.

மேலும் நம் உடல்கூட ஏற்கனவே, தானே உற்பத்தி செய்து கொண்டிருக்கும் கொலஸ்ரோலைக் கொஞ்சம் மட்டுப்படுத்திக் கொள்கிறது.

அதன்மூலம் கொலஸ்ரோல் (கொழுப்பு) அதிகரிக்காமல் சமநிலைப்படுத்திக் கொள்கிறது.

இதனால் முட்டையிலுள்ள மித மிஞ்சிய கொலஸ்ரோல் நம்முடலில் ஏறாமல், நம்மால் தப்பித்துக்கொள்ள முடிகிறது.

# சுனாமி — ஒரு கடல் காவியம்

மனோன்மணி சண்முகதாஸ்

(2ஆம் அத்தியாயம்)

''இண்டைக்கு ஒரு முடிவு எடுக்க வேணும்!'' உரலிலே நெல்லைக் குற்றிக் கொண்டிருக்கும் செல்லக் கண்டுவின் உள்ளம் தவிக்கிறது.இதுவரைக்கும் பட்ட பாடு போதும் . அப்போது ஏதோ சத்தம் கேட்டது. கண்களை உயர்த்திப்பார்க்கிறாள்.அங்கே வெள்ளைக்காரன் கோலத்தில்... முத்துலிங்கம் வந்து கொண்டிருந்தான். அவன் நடை! அந்தச் சப்பாத்தின் ஓசை அவளுக்கு... அபாயம் வருகிறதென்பதை உணர்த்தியது. அவன் கிட்ட வந்து விட்டான். செல்லக்கண்டு உலக்கையை இரு கைகளாலும் இறுகப் பற்றிக்கொண்டாள்.

வீட்டில் யாருமில்லை! மகளும், மருமகனும் உறவினர் வீட்டுக் கலியாணத்துக்குப் போய்விட்டார்கள். பேத்தி பரிமளம்... பள்ளிக்கூடம் சென்று விட்டாள். இப்ப இவன் எல்லாம் அறிந்து தான் இந்த நேரம் வந்திருக்கிறான்!

என்ன செல்லக்கண்டு! நீ நல்லா வாடிப் போனாய்! நெல்லை மில்லில குடுத்துக் குத்திறது தானே! நீ ஏன் உந்த வேலை எல்லாம் செய்யிறாய்...

இந்த அனுதாபம் ! செல்லக்கண்டுவுக்கு கோபம் ஊட்டுகிறது. ஆனால் இவனோடை இப்ப கோவிச்சுப் பிரயோசனமில்லை. பக்குவமாப் பேசி ஆளை வெளியேற்ற வழி பார்க்க வேணும். அவள் எண்ணம்! அவனுக்குத் தெரிஞ்சு விட்டது போல அருகிலிருந்த முக்காலியை லேஞ்சியால் துடைத்துவிட்டு இருந்து விடுகிறான். அவன் லேஞ்சியிலிருந்து வீசிய அந்த வாசனை!.. ஒரு கணம் அவளை எங்கோ அழைத்துச் சென்றது... அவரும் இப்படித்தான்! ஒரு வாசனைப் போத்தலை லேஞ்சியை நனைச்சுக் கொண்டு சட்டைப் பையிலை வைச்சுக் கொண்டு போறவர். சிலவேளை அந்த வாசனைத் தைலத்தைக் கழுத்திலை பூசிக் கொண்டும் போறவர். கேட்டால்...

அங்கை ஒரே மீன் நாத்தம்! இதில்லாட்டில் மூக்கைப் பொத்திக் கொண்டுநிக்க



வேணும்.

அவர் சொல்லிற சாட்டு! அவளுக்குப் பொருத்தமாக இருக்கும்.

ஆனால் இப்ப முத்துலிங்கம் [illegible]சியிருக்கிற நோக்கம் என்னெண்டு அவளுக்கு நல்லா விளங்குது. பேசாமல் உலக்கையைப் பிடித்துக் கொண்டு நிற்கிறாள்.

நான் ஒரு முக்கிய அலுவலா வந்தனான்! என்ன வீட்டிலை வேற ஒருதரும் இல்லைப் போல!

சொல்லிவிட்டு தலையிலிருந்து தொப்பியைக் கழற்றுகிறான். தலை மினுக்கிய சருவச்சட்டியைப் போலப் பளபளக்கிறது. பிடரிப்பக்கம் மட்டும் அறுத்துவிட்ட சீமைப் புல்லுப் போல மயிர் குத்திட்டு நிற்கிறது.

கப்பலிலை வேலையாம்! அதுக்கேற்ற உடுப்பாம்! எண்டு அவன் கோலம் காட்டித் திரியிறான்!

அன்றொரு நாள் அவர் சொன்னது அவளுக்கு நினைவுக்கு வருகிறது. அப்போது செல்லக்கண்டு சொன்னதும் நினைவுக்கு வந்தது.

'வேலைக்கேற்ற உடுப்புப் போட வேணும் தானே!'

'நான் உந்த விசர்க்கோலத்திலை வரமாட்டன்எண்டுசொல்லிப் போட்டன்! அது தான் வெள்ளைவேட்டியும், நாசனலும் போடுறன்!'

அவற்றை குரலிலை இருந்த உறுதி அவர் சொன்ன மாதிரித்தான் நடந்தார் கங்காணியார்! எண்டு எல்லாரும் அவரை மரியாதையாகக் கூப்பிட்டார்கள். சாகும் வரை அந்த மதிப்புக் குறையவேயில்லை. செல்லக்கண்டுவின் மனம் இப்போது ஒரு கணம் விம்மியது. கண்கள் சற்றுக் கலங்கின. முத்துலிங்கம்... பதறி எழும்பினான் என்ன! ஐயோ! இவன் என்னைக் கண்டு பிடித்துவிட்டானே! என் பலவீனத்தை ஏன் இவனுக்குக் காட்டினேன் அவள் சட் டென்று சமாளித்தாள்.

'அது ஒண்டுமில்லை! தவிடு கண்ணுக்கை விழுந்திட்டுது!'

சேலைத் தலைப்பால் கண்களைத் துடைத்தாள். அவனும் திரும்பிப் போய் முக்காலியிலை இருந்தான்.!

'சிவத்தின்ர கொடுப்பனவுகள் சம்பந்தமாக சில படிவங்கள் நிரப்பவேணும். நான் எல்லாம் நிரப்பிப் போட்டன். நீ கையெழுத்துப் போட்டாச் சரி!'

அவன் சொன்ன போது மனது பொங்கியது! வேலைக்கு எண்டு காலையிலை போன சிவம் மதியம் சாப்பிட வராமல் பிணமாய் வந்தான். மாரடைப்பு எண்டு சொன்னார்கள்! அவ்வளவு தான் செல்லக் கண்டுவுக்குத் தெரியும்! ஆனால்இப்ப ஊர் வேறு செய்தி சொல்கிறது. அதை அவள் காதிலும் மருமகன் போட்டு விட்டான். அவன் நித்தக்குடியன்! மகளை நாளும் வதைக்கிறான். பிள்ளையைக்கூட அடிக்கிறான். ஆனால் என்ர அவர்! ஒரு நாள் கூட என்னைத் தொட்டதில்லை! முப்பது வருஷம் சந்தோசமா ஒரு குறையும் கைக்காமல் அவர் என்னை ராசாத்தி போல வைச்சிருந்தார்.அவருக்கு என்னசாகிறவயதே! 53 வயது! ... நாங்கள் கலியாணம் கட்டக்கை எனக்குப் 16 வயது. அவருக்கு 23 வயது! எல்லாரும் நல்ல சோடி எண்டு சொல்லிச்சினம். கட்டின உடனை மலைக்குக் கூட்டிக் கொண்டு வந்திட்டார். எனக்கு அம்மா இல்லை. நான் அஞ்சு வயதா இருக்கைக்க அவ தம்பியைப் பெத்துப் போட்டுச்செத்துப் போனா! பிறந்த தம்பியும் மூண்டாம் நாள் செத்துப் போனான். என்ர ஐயா! அவர் நல்லவர். பிறகு கலியாணம் கட்ட இல்லை. அவருக்கு அப்ப முப்பது வயதுதான். கடல் தொழிலோடை என்னை வளர்க்கிறதில்லை காலத்தைப் போக்கிப் போட்டார்.

நான் இவரோடை மலைக்கு வந்த பிறகு தனியத்தான் யாழ்ப்பாணத்தில இருக்கிறார். நல்லா வயது போட்டுது. இப்ப கடல் தொழில் செய்ய முடியாது. ஆனால் செய்யிறவைக்கு உதவியாக நிண்டு ஏதோ காலத்தை ஓட்டுறார். எங்கடை பிள்ளையார் கோயில் திருவிழாவுக்குநாங்கள் வருஷா வருஷம் யாழ்ப்பாணம் போறது வழக் கம். பத்துநாள் நிப்பம். ஐயாவுக்கு நல்ல சந்தோஷம். பரிமளாவைத் தூக்கி வைச்சுக் கொண்டு கடலையே பார்த்துக் கொண்டிருப்பார்.

'நான் நாலு தலைமுறையைப் பார்த்திட்டன்!' எண்டுபுளுகிக்கொண்டிருப்பார்.

ஆனால் ஒரு நாள் என்ர மருமகன் என்ன பெத்தைய்யா! உங்கடை பரம்பரை நாலும் பெட்டைதானே? எண்டு சொல்ல ஐயாவுக்குக் கோபம் வந்திட்டுது.

மடையா பெட்டைப் பரம்பரை தான்ரா பரம்பரையை உருவாக்கிப் பேணும்?

செல்லக் கண்டு என்னகடும் யோசனை? முத்துலிங்கம் எழும்பி வந்தான். இந்த வயதிலும் நீ எடுப்பாத்தானிருக்கிறாய்!


அவள் குரல் குழறியது. வாயில் அந்த மான் சோடா வாசம்!

நான் பதறி உலக்கையைப் போட்டு விட்டேன். அவன் நெருங்கினான்!

திடீரென்று வாசலில் பெத்தா! என்று குரல் கேட்டது. (தொடரும்...)

# அகநிலை மாற்றத்தின் அவசியம்

ஆதிலட்சுமி சிவகுமார்




(சென்றவாரத் தொடர்ச்சி...)

நாளடைவில் இதுவே ஆணையும், பெண்ணையும் இருதுருவங்களாக்கிவிடுகிறது.

சில இடங்களில் பெண்வீட்டாரை மிகவும் பிழிந்தெடுத்து வாங்கிய சீதனத்தை ஒருசில வருடங்களில் அழித்து, பெண்ணையும் துன்புறுத்துபவர்கள் இருக்கிறார்கள்.

'நீங்கள் சீதனம் வாங்கியா திருமணம் செய்வீர்கள்' என்று ஒரு இளைஞரைக் கேட்டேன்.

'இல்லை' என்றார் உறுதியாக.

'ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?' என்று கேட்டேன்.

'சீதனம் பொம்பிளையளுக்கு ஒரு பிடி. எதற்கெடுத்தாலும் நான் சும்மாவா வந்தேன்? என்று கேட்பார்கள். அதிலும் பார்க்க வாங்காமலிருப்பது நல்லது தானே...' என்றார்.

'பெண்கள் அப்படிக்கேட்பினம் என்று கற்பனை செய்து முடிவு எடுத்தீர்களா?...'

'பல குடும்பங்களிலையும் நடக்கிறதைப் பார்க்க அப்பிடித்தான் நினைக்க முடியுது' என்றார்.

சீதனம் என்பது ஆணை அடக்கும் கருவியாகப் பெண்ணுக்கும், பெண்ணை அடக்கும் கருவியாக ஆணுக்கும் ஆகிறதோ? என்றே அச்சம் எனக்கு எழுந்தது.

'பெண்ணுக்கு தாங்கள் விரும்புறதைப் பெற்றவர்கள் கொடுத்தால் மற்றவர்களுக்கு என்ன?' என்று ஒருவர் கேட்டார்.

'அப்படி விருப்பமானதைக் கொடுக்கலாம். ஆனால் - எங்கே அப்படிக் கேட்கிறார்கள். இவ்வளவு கொண்டுவா என்றல்லவா கேட்கிறார்கள்'; என்றார் இன்னொருவர்.

ஆனால் பொதுவாகப் பார்த்தோமென்றால், சீதனம் என்பது ஒட்டு மொத்த சமூகத்தையே பாதிக்கின்ற ஒரு விடயமாக இருக்கிறது. மாமியார் ஒருவர் சீதனம் எதிர்பார்க்கிறார். அல்லது கடுமையாக சீதனம் கேட்கிறார் என்றால், அவர் தான் மருமகளாக இருந்தபோது அனுபவித்தவற்றின் பிரதிபலிப்பாகவே அதைக் கொள்ளலாம்.

இதன்படி, எமது சமூகத்தில் புரையோடிப் போயிருக்கும் 'சீதனம்' என்ற நோய் அடிப்படைக் கட்டமைப்பில் காணப்படுகின்ற தவறாகவே இருக்கிறது. ஒருகாலத்தில் பெண் வெறும் சடமாய், பொருளாய்ப் பார்க்கப் பட்டாள். இன்று பெண்களின் நிலை அவ்வாறில்லை. சமூகத்தின் மேம்பாட்டை தமது தோள்களிலேற்றிச் சுமக்கும் நிலையில் பெண்கள் இருக்கின்றனர். பழமைகளையும், பிற்போக்குத்தனாங்களையும் உடைத்துக் கொண்டு, அறிவுரீதியாக வளர்ச்சிப் பாதையில் பெண்ணினம் கால்பதிக்கிறது.

இந்த நிலையில் சீதனம் என்பது அநாகரிகமானது. அதிலும் இதைக் கருவியாக வைத்து மனித வாழ்வைப் பேரம் பேசுவது இன்னமும் அநாகரிகமானது. சீதனம் என்னும் இந்தச் சமூக நோயால், பல பெண்களின் வாழ்வுமட்டுமல்ல, பல ஆண்களின் வாழ்வும், நிம்மதியும் பாதிக்கப்படுகிறது.

தன் பெண்பிள்ளையின் எதிர்காலத்துக்காக தாயும், தந்தையரும் வயிற்றையும், வாயையும் கட்டி எத்தனையோ துன்பப்படுகின்றனர். பெரும் பணத்தையும், நிலபுலங்களையும், வீடுகளையும் சீதனமாகக் கொடுத்துங்கூட, நிம்மதியற்ற வாழ்வு வாழும் பெண்கள் உள்ளனர்.

அக்கா தங்கைகளின் வாழ்வுக்காக தன் இளமைக்காலம் முழுவதையும் விரயமாக்கி காசு உழைக்கும் ஆண்களும் இருக்கிறார்கள்.

தங்களுக்காக தாங்களே உழைத்து சீதனம் சேர்த்து வைக்கின்ற பெண்களும் இருக்கிறார்கள். இப்படிச் சீதனம் என்பது சமூகத்திலுள்ள எல்லா மனிதர்களையும் பாடாய்ப்படுத்துகிறது. இது பெரியளவில் தமிழ்ச் சமூகத்தில் தான் காணப்படுகிறது.

ஒருபெண்ணுக்கு குறிப்பிட்ட தொகைப் பணம் தருவதாகக் கூறி, திருமணப்பதிவு நடைபெற்றது. தாலிகட்டுகின்ற நாள்வரை குறிப்பிட்ட தொகைப்பணத்தைப் புரட்ட பெண்ணின் உறவினரால் முடியவில்லை. பணம் தருவதாகக் கூறிய உறவுகள் சிலவும் பொறுத்த நேரத்தில் கைவிரிக்க, திருமணம் தடைப் பட்டது. பொறுமையிழந்த மாப்பிள்ளைவீட்டார் விவாகரத்துக்கோரி, இறுதியில் விவாகரத்தும் கிடைத்தது. ஊரில் இனி வாழமுடியாது என்று கருதிய பெண் - வேற்று ஊருக்குச் சென்று வாழ்கிறார். குறிப்பிட்ட ஆண் வேறு திருமணம் செய்து வாழ்கிறார்.

இப்படியாகவெல்லாம் சீதனத்தின் பாதிப்புகள் ஆழமான வடுக்களாக சமூகத்தின் மனதில் ஆன்மாவில் பதிந்திருக்கிறது.


இன்னும் பல சம்பவங்கள் எல்லா இடங்களிலும், எல்லா மனங்களிலும் இருக்கின்றன. சீதனம் என்பது - எமது சமூகத்துக்குப் பெரும் துன்பம் என்பது அனைவருக்கும் புரிந்த விடயம். ஆனாலும் குருதிவழிய வழிய மீண்டும் மீண்டும் முட்செடியை உண்ணும் ஒட்டகம் போல, சமூகத்தின் பல உள்ளங்கள் சீதனத்தைப் பற்றிப்பிடித்துள்ளன. இது ஆரோக்கியமான ஒரு சமூகத்துக்கு அழகானதல்ல. சீதனம், பெண் ஒடுக்குமுறை வடிவங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

'பெண்விடுதலை என்பது அரச ஒடுக்கு முறைகளிலிருந்தும், சமூக ஒடுக்கு முறைகளிலிருந்தும் பொருளாதார சுரண்டல் முறைகளிலிருந்தும் விடுதலை பெறுவதாகும்' என எமது தேசியத்தலைவர் குறிப்பிட்டிருக்கிறார்.

சமூகத்திலுள்ள அனைவரும் விழிப்புணர்வு பெற்றால் மட்டுமே இந்தப் பெண் விடுதலை என்பது சாத்தியமாகும். விடுதலையை நோக்கிய விழிப்புணர்வு என்பது புறத்தில் ஏற்படுவதல்ல. அகநிலையில் ஏற்பட வேண்டும். இந்த அகநிலை மாற்றமே இன்றைய எமது சமூகத்தின் அவசியமாகிறது. சுய பொருளாதாரத்தில் நின்று வாழும் நிலையை ஏற்படுத்திக்கொள்வதோடு, அளவுக்கு அதிகமான ஆடம்பரவாழ்வு பற்றிய ஆசைகளையும் துறக்கக்கூடிய அகநிலை மாற்றம் நிகழ வேண்டும். அப்போதுதான் எமது சமூகம் பூரண விடுதலை பெற்ற, தன்னிறைவுச் சமூகமாகத் திகழும். (முற்றும்)

# இடைக்கால நிர்வாக சபை மட்டுமே சமாதானத்தை தக்கவைக்க ஒரே வழி

## முல்லை அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம்





**இடைக்கால நிர்வாகம் மற்றும் சுனாமி உதவி வழங்குதல் தொடர்பான பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்துதல் போன்ற விடயங்களில், அரசாங்கம் காட்டிவரும் அசமந்தப் போக்கைக் கண்டித்து நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பில் மாபெரும் கண்டனப் பேரணி இடம்பெற்றது.**

**இந்தப் பேரணியின் இறுதியில் முல்லைத்தீவு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தால் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினத்தினூடாக நோர்வே அரசுக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. அந்த மகஜரில் -**

இந்த நாட்டில் அமைதியைப் பேணும் வகையில் கடந்த மூன்று வருடங்களாக தங்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் பலவிதமான முயற்சியைப் பற்றி நாம் நிரம்பவே தெரிந்து கொண்டுள்ளோம்.

இந்த மண்ணில் வாழ்கின்ற அனைத்து மக்களுமே சுதந்திரமாகவும், கௌரவமாகவும், உரிமையுடனும் வாழத் தகுதி உள்ளவர்கள் என்பதை மனிதநேயம் கொண்ட தாங்களும், தங்களது அரசும், ஏன் சர்வதேச சமூகமும் எந்தவித ஐயப்பாடுமின்றி ஏற்றுக்கொள்வார்கள். ஏற்றுக்கொண்டுள்ளீர்கள்.

உரிமைகள் மறுக்கப்பட்ட, சுதந்திரம் பறிக்கப்பட்ட, கௌரவம் சிதைக்கப்பட்ட சூழலிலேதான் தமிழ் பேசும் மக்கள் போராட முற்பட்டார்கள்.

அகிம்சையில் ஆரம்பித்த அவர்களது போராட்டம் - காலப்போக்கில் அரசினது கொடூரமான இராணுவ அணுகுமுறையின் பயனாகவும், பௌத்த பேரினவாதத்தின் நீதியற்ற செயற்பாட்டு விளைவுகளாலும், அரசியல்வாதிகளின் நேர்மையற்ற சிந்தனையின் வெளிப்பாட்டு வீச்சத்தாலும் நசுக்கப்பட்டதோடு, முழுத் தமிழ் இனமுமே அடிமைகளாக வாழவேண்டிய அல்லது அழிந்து போக வேண்டிய சூழலில் அது ஆயுத கலாசாரமாக உருப்பெற்றது. உண்மையில் ஆயுத கலாசாரம் எம்மீது திணிக்கப்பட்டது.

திணிக்கப்பட்ட ஆயுத கலாசாரத்தின் பயனாக நாம் இந்த மண்ணில் உரிமையோடு சுதந்திரமாக வாழுகின்ற சூழ்நிலை உருவாகி வந்தது.

எமக்காக, எம் விடிவுக்காக, எம் உரிமைக்காக, எம் மண்ணுக்காக கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேல் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் தலைமையின் கீழ் ஒன்றுபட்டு போராடி வருகின்ற நாம் -

சர்வதேச சமூகத்தின் வேண்டுகோளுக்கு அமைவாகவும், தங்களது பிரத்தியேகமான கருணையோடு கூடிய முன்னெடுப்புக்கு இசைவாகவும் செயற்பட முற்பட்டு மூன்று வருடங்கள் ஓடிவிட்டன.

இந்த நிலையில் நாம் இந்த மூன்று வருட சமாதான முன்னெடுப்பு முயற்சியில் அறுவடைகளாக எதைப் பெற்றுள்ளோம் என்பதை நோக்கின் -

நேரடி இராணுவத் தாக்குதலோ அல்லது போர் விமானங்களின் இரைச்சலோ இல்லாது இருப்பது ஒரு நன்மை. ஆனால் மறுபுறத்தில் -

சமாதான புரிந்துணர்வு ஒப்பந்த காலத்தில் தொடர்ச்சியாகவும், மறைமுகமாகவும், நேரடியாகவும் எமது போராளிகள் மீது ஆயுதப்படைகள் செய்யும் அடாவடித்தனம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

மிகக் குறுகியகால எல்லைக்குள் முன்னை நாள் மட்டு- அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் கௌசல்யன், நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு உட்படப் பலர் கொல்லப்பட்டது, தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கடுமையாகத் தாக்கப்பட்டது.

மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் நேரடியாகத் தாக்கப்பட்டது, ஒரு மேஜர் தர போராளி உட்பட இருவர் கோடரி, வாள் போன்ற ஆயுதங்களால் வெட்டி கொலைசெய்யப்பட்டது, நாட்டுப்பற்றாளர்கள் கொல்லப்பட்டது.

இயற்கை அனர்த்தம் சுனாமி பேரழிவு காலத்தில் -

திட்டமிட்டு வடக்கு - கிழக்குக்கு கிடைக்கவேண்டிய நிவாரணப் பொருட்களை தெற்குக்கு மாற்றியது.

வடக்கு - கிழக்குக்கு என்று வந்த நிவாரணப் பொதிகளை இறங்குதுறையில் முடக்கி வைத்தது.

உயிரைக் காக்கும் பொருட்டு எமது மக்கள் இடம்பெயர்ந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, திட்டமிட்ட இன ரீதியான குடியேற்றங்களைச் செய்துகொண்டு இருப்பது.

மனிதநேயத்தோடு எமக்கு உதவி செய்ய வருகின்ற சர்வதேச தொண்டர் நிறுவனங்களைத் தடுத்து நிறுத்தியது, அவர்களைப் பொய்யர்கள் என வர்ணிப்பது எனப் பற்பல தீமைகளே அறுவடைகளாகப் பெறப்படுகிறது.

எனவே இன்னமும் நாம் இழக்கின்ற நிலை வருமானால், அதை எம்மால் ஜீரணிக்க முடியாது. இது போன்ற காரணத்தால் மேலும் இழப்புக்களைத் தவிர்க்கும் வகையில் மீண்டும் ஆயுதப் போராட்டமாக எமது போராட்டம் மாற வேண்டிய சூழலை அரசினதும், ஆயுதப் படைகளினதும் செயற்பாடுகள் வலியை ஏற்படுத்துகின்றன.

இதைத் தவிர்ப்பதற்குரிய ஒரே வழி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையின் கீழ் நாம் கடந்த சில வருடங்களாகக் கேட்டுநிற்கும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை தாங்களும், சர்வதேச சமூகமும் இணைந்து -

அரசை இதனை ஏற்க வைப்பதன்மூலம் மேலும் இழப்புக்களைத் தவிர்க்க வழி கோலுவதேயாகும்.

இதன் காரணத்தால் தமிழீழ விடுதலைப் புலிகளின் கையில் வடக்கு - கிழக்குக்கான இடைக்கால அரச நிர்வாகத்தைக் கையளித்து, அதன் மூலம் - எம் மக்களை சகவாழ் வுக்கு இட்டுச்சென்று நிரந்தர சமாதானத்துக்கான பேச்சுக்களை ஆரம்பிப்பதற்குரிய சூழலை உருவாக்கி -

இந்த மண்ணில் நாம் முழுச் சுதந்திரத்துடனும், உரிமையுடனும், கௌரவமாகவும் வாழ வழி சமைக்க வேண்டுமென்று தங்களைத் தயவாக வேண்டி நிற்பதோடு, "தற்போதைய சூழலில் இடைக்கால நிர்வாகத்தை தமிழீழ விடுதலைப் புலிகளின் கையில் கொடுப்பது, சமாதானத்தை இந்த மண்ணில் தக்கவைக்க ஒரே வழி என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி நிற்கின்றோம் என அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வவுனியா ரயில் நிலையத்திலும் ஆசனப் பதிவு மேற்கொள்ளலாம்

(கிளிநொச்சி)

கோட்டை ரயில் நிலையத்தைப் போன்று வவுனியா ரயில் நிலையத்திலும் வடபகுதிக்கான ரயில்களுக்குரிய ஆசனங்களை முன் கூட்டியே பதிவு செய்து கொள்ள முடியும் என்று வவுனியா ரயில்வே திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வவுனியாவிலிருந்து கொழும்பு கோட்டைக்குச் செல்லும் இரவு தபால் ரயில் மற்றும் யாழ்தேவி, கடுகதி ரயில் ஆகியவற்றின் உறங்கல் இருக்கைக்கான பதிவுகளை 10 தினங்களுக்கு முன்பாக செய்துகொள்ள முடியும் என்றும், இது எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் அமுலுக்குவருமெனவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தற்போது அன்றன்று பயணம் செய்வதற்கான உறங்கல் இருக்கைகளைப் பதிவு செய்யும் நடவடிக்கையே அமுலில் இருந்து வருகிறது.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் மாத்திரமே முன்கூட்டியே ஆசனப்பதிவு செய்யும் நடைமுறை இருந்து வருகிறது. பயணிகளின் நன்மைகருதி இந்த நடைமுறையை வவுனியா ரயில் நிலையத்துக்கும் விஸ்தரிப்பதற்கு ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## தமிழீழ நுண்கலைக் கல்லூரியால் நடத்தப்பட்ட ஓவியப் போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்

(முல்லைத்தீவு)

தமிழீழ நுண்கலைக் கல்லூரியால் வடக்கு - கிழக்கு மாகாண ரீதியாக நடத்தப்பட்ட ஓவியப் போட்டியில் வெற்றியீட்டியோரின் பெயர் விபரங்கள் வெளியாகியுள்ளன.

கீழ்ப்பிரிவு:-

முதலாம் இடம் - நா.ஜெயஸ்ரீ (தரம் -7 கிளிநொச்சி மகா வித்தியாலயம்), இரண்டாம் இடம் - செ.செந்தீபன் (4 ஆம் வட்டாரம் முள்ளியவளை முல்லைத்தீவு), மூன்றாம் இடம் - இ.சோபிகா (தரம் 7 கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்).

ஆறுதல் பரிசுகள் :-

கி.கீர்த்தனா (கிளிநொச்சி), ப.ஆரணன் (முள்ளியவளை), தெ.பகீரதன் (கிளிநொச்சி), க.சங்கவி (கிளிநொச்சி), ஜெ.கமலேந்திரன் (கிளிநொச்சி), பா.யசோதினி (கிளிநொச்சி), த.தினேஸ் (ஒட்டுசுட்டான்), ச. சகுந்தலா (செஞ்சோலை வள்ளிபுனம்), கி.எனட் ஜெரோன் (கிளிநொச்சி), ப.ரினோசன் (கிளிநொச்சி), வை.செல்வராசா (செஞ்சோலை வள்ளிபுனம்), த.பகீரதன் (கிளிநொச்சி) ர.டிலக்சினி (செஞ்சோலை வள்ளிபுனம்), ச.ஜெயரோஸ் (கிளிநொச்சி) க.டனார்த்தன் (கிளிநொச்சி)

மத்திய பிரிவு :-

முதலாம் இடம் - ரூபிகா கிருபானந்தன் (அரச வீதி நல்லூர் யாழ்ப்பாணம்), இரண்டாம் இடம் - கருணாகரன் கிருஷாந்தன் (குலவாதரை அளவெட்டி), மூன்றாம் இடம் - மனோகரன் நியூசிகன் (உடையார்கட்டு மகா வித்தியாலயம்).

சிறப்பு ஆறுதல் பரிசு :-

ரவிச்சந்திரன் பகீரதி (செஞ்சோலை வள்ளிபுனம்).

ஆறுதல் பரிசுகள் :-

சரவணபவன் உமாப்பிரியா (உடையார்கட்டு), பற்குணராஜா ராம்ராஜ் (யாழ்ப்பாணம்), ஸ்ரீதரன் யசோதாரணி (உடையார்கட்டு), யசிதரன் பாலசிங்கம் (உடையார்கட்டு), விக்னராஜா கபில்தேவன் (கிளிநொச்சி), ஸ்ரீஸ்கந்தராஜா துஸ்யந்தன் (முள்ளியவளை), இரவீந்திரன் கமில்டன் (நல்லூர்), சச்சிதானந்தம் தேவானந் (யாழ்ப்பாணம்), பாக்கியராசா இதயகுமார் (கிளிநொச்சி), எட்வின் குலராசா லக்ஷன் (கிளிநொச்சி), சண்முகலிங்கம் நிரோஜன் (யாழ்ப்பாணம்), மா.புஸ்பகுமார் (ஒட்டுசுட்டான்), பாலசிங்கம் சதீஸ்வரன் (யாழ்ப்பாணம்), பஞ்சாட்சரம் ஜெயராம் (தெல்லிப்பளை).

மேற்பிரிவு :- முதலாம் இடம் - சாருபா சரவணபவன் (கல்வியங்காடு யாழ்ப்பாணம்), இரண்டாம் இடம் - இராஜ நாயகம் ராஜ்குமார் ( ஏழாலை மத்தி ஏழாலை), மூன்றாம் இடம் - செண் பகலிங்கம் ஜெகன் (கோணாலை லேன் கொக்குவில்).

சிறப்பு பரிசு :-

தர்மலிங்கம் கௌரி (நவம் அறிவுக்கூடம்).

சிறப்பு ஆறுதல் பரிசுகள் :-

அல்பிரட் கெமிலஸ் பென்சன் (புதுக்குடியிருப்பு), மயில்வாகனம் கணேசாந்தன் (நல்லூர்).

ஆறுதல் பரிசுகள் :-

பாலசுப்ரமணியம் பிரேமரஞ்சனா (யாழ்ப்பாணம்), கிருஷ்ணபிள்ளை ஜெகதீஸ்வரன் (கிளிநொச்சி), பஞ்சாட்சரம் பானுசேகரன் (தெல்லிப்பளை), வசந்தகுமாரி செல்லத்துரை (நல்லூர்) கண்ணதாசன் சந்திரசேகரன் (புதுக்குடியிருப்பு) தர்மலங்கம் தர்மநாத் (உடையார்கட்டு)

பூபாலசிங்கம் நிரஞ்சன் (புதுக்குடியிருப்பு) சின்னத்துரை ஜெகதீபன் (கரவெட்டி) சிவகுரு திமுனா (செஞ்சோலை வள்ளிபுனம்) அருளானந்தம் ஜெயரூபன் (புதுக்குடியிருப்பு) சிவபுண்ணியம் நந்தகுமார் (உடையார்கட்டு) திருநாவுக்கரசு கார்த்திகேஜினி (சுன்னாகம்) கறுப்பையா யோகராஜ் (உடையார்கட்டு) இவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் இந்த மாத இறுதிக்குள் தமிழீழ நுண்கலைக் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பிரத்தியோக விழாவொன்றில் வைத்து வழங்கப்படவுள்ளதாக நுண்கலைக் கல்லூரிப் பணிப்பாளர் க.தணிகைமாறன் தெரிவித்தார்.

## சனசமூக நிலையம் திறப்பு விழா

வட்டக்கச்சி இராமநாதபுரம் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட கலைச்சுடர் சனசமூகநிலையத் திறப்பு விழா நிகழ்வு - கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றது.

இந்தத் திறப்பு விழா சனசமூக நிலையத் தலைவர் சோ.ரவீந்திரன் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் சனசமூக நிலைய பெயர்ப்பலகையை கிளிநொச்சி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் த.உஷா திரைநீக்கம் செய்து வைத்தார்.

சனசமூக நிலைய மண்டபத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

### ஏப்ரல் 8

1861 : ரஷ்ய ஆதிக்கத்தை எதிர்த்து கோட்டையின் முன் ஆர்ப்பாட்டம் நடத்திய போலந்து மக்கள் மீது ரஷ்யப்படையினர் கண்மூடித்தனமாகச் சுட்டு நூற்றுக் கணக்கானோரைக் கொன்று குவித்தனர்.

1904 : பரம்பரை விரோதிகளாக இருந்துவந்த பிரிட்டனும், பிரான்ஸும் "என்டென்டி கார்டியேல்" என்றழைக்கப்படும் ஒப்பந்தத்தைச் செய்தது. இந்த ஒப்பந்தம் மூலம் இவை ஜேர்மனியை விட்டுவிலகி ஒன்று சேர்ந்து கொண்டன.

1941 : கிறீஸ் மீது ஜேர்மனி திடீர்த்தாக்குதலை நடத்தி 70 ஆயிரம் பேரை போர்க் கைதிகளாகப் பிடித்தது.

1949 : ஜேர்மனியில் தாங்கள் பிடித்த பகுதிகளை ஒன்றாக இணைத்து ஒரே குடியரசாக உருவாக்கப்போவதாகவும், நிர்வாகத்தை இராணுவத்திடமிருந்து மக்களிடம் ஒப்படைக்கப் போவதாகவும் அமெரிக்கா, பிடிட்டன், பிரான்ஸ் ஆகிய மூன்று நாடுகளும் இணைந்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டன.

1973 : சிக்கிம் மன்னர் "பால்டென் தொண்டப்நாம்கியா" அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி அதன் நிர்வாகத்தை இந்தியா பொறுப்பேற்றது.

1977 : சூரியனில் இருக்கும் 700 கோடி சதுரமைல் பரப்பளவைக் கொண்ட "சூரிய புள்ளி"(sun spot) கண்டுபிடிக்கப்பட்டது.

1988 : ஈரானில் 1979 ஆம் ஆண்டுப் புரட்சிக்குப் பின்னர் முதல்முதலாக நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது.

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

*சிந்தனைக்கு*

*தூங்காமை கல்வி துணிவுடமை இம்மூன்றும்*
*நீங்கா நிலனாள் பவற்கு.*

*திருக்குறள்*

# நமது நோக்கு

## சோமவன்ஸவின் அறிக்கைகள் யாவும் சமாதானத்திற்கான அச்சுறுத்தல்களே...

"இடைக்கால நிர்வாக அதிகார சபை குறித்து அரசு புலிகளுடன் பேசுமானால் நாம் அதனைக் கடுமையாக எதிர்ப்போம்..."

"பொதுக்கட்டமைப்பொன்றினை புலிகளுடன் இணைந்து அரசாங்கம் ஏற்படுத்தவே கூடாது. நாம் அதற்கு உடன்படவே மாட்டோம். அது விடுதலைப் புலிகளை அங்கீகரிப்பதாகிவிடும்..."

"சமஷ்டி அடிப்படையிலான தீர்வு குறித்து அரசு சிந்தக்கவே கூடாது. நாம் அதனை ஏற்கவே மாட்டோம் அது தமிழீழத்திற்கு பாதைசமைத்துவிடும்..."

"இதற்கு மாறாக அரசோ, ஜனாதிபதியோ செயற்பட முயன்றால் நாம் அவர்களுக் கெதிராக போர்க்கொடியுயர்த்துவோம், அரசை கவிழ்க்கவும் தயங்கமாட்டோம்..."

- இவையனைத்தும் அண்மையில் ஜே.வி.பி யின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவால் வெளியிடப்பட்ட அறிக்கைகளிலும், ஆற்றிய உரைகளிலும் இருந்து எடுக்கப்பட்ட கருத்துக்களாகும்.

இவையாவும் ஜே.வி.பி யினரின் இனப்பிரச்சினை தொடர்பான கருத்து நிலைப்பாட்டை தெளிவுபடுத்துவதாகவே அமைந்துள்ள போதிலும், அவர்கள் இன்றைய அரசிலும், அரசியலிலும் வகிக்கும் பாத்திர முரண்பாட்டினையும் பிரதிபலிக்கவே செய்கின்றன எனலாம்.

மேற்குறித்த அனைத்தையும் ஆக்ரோஷமாகக் கூறி மேடையினை அதிரவைத்துவரும் அவர், மேடையில் இருந்து இறங்கிப் போனதும், "நாம் அரசை எதிர்ப்போம், அவ்வளவுதான்... ஆனால், ஆட்சியில் இருந்து இறங்கிப் போகவே மாட்டோம்" என்றும் பிரகடனம் செய்வதன் மூலம் தமது பலவீனத்தை அப்பட்டமாக வெளிப்படுத்தவும் செய்துள்ளார். அதாவது, பதவியில் 'ஒட்டுண்ணி'யாக அமர்ந்து கொண்டு - தமது உறுப்பினர்களின் பலத்தை வைத்துக் கொண்டு - அரசாங்கத்தை ஆட்டிப்படைத்தபடி - ஜனாதிபதியை மிரட்டியபடி காலத்தையோட்டிவிடவே ஜே.வி.பி திட்டமிடுவதுடன், சமாதான முயற்சிகளை அரசோ ஜனாதிபதியோ தொடரவிடாது முட்டுக்கட்டை போட்டபடி இனப்பிரச்சினைக்கு எந்தவகையிலும் தீர்வுகாணவிடாது தடுக்கும் மூலோபாயத்தின் அடிப்படையில் அரசியல் காய்களை நகர்த்தவே விரும்புகின்றதெனலாம்.

இந்த உத்தி, பௌத்த சிங்கள மக்கள் மத்தியில் தங்களை மட்டுமே தேசபக்தர்களாக இனங்காட்டி, இனவாத அரசியலை புதிய முறையில் தொடர தமக்கு கைகொடுக்கும் என்றே ஜே.வி.பி யினர் நம்புகின்றனர் என்றே கூறவேண்டும்.

எனவேதான் ஐக்கியதேசியக் கட்சியைவிடவும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியை விடவும், ஏனைய பேரினவாத இடது சாரித் தலைமைகளைவிடவும் இனவாதம் கக்க ஜே.வி.பி தற்போது முனைப்புக் கொண்டுள்ளதெனலாம்.

கடந்த சில வாரங்களாகவே இவ்விடயத்தில் ஜே.வி.பி யின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தீவிரம் காட்டத் தொடங்கியுள்ளார் ஏன்றே கூறவேண்டும்.

ஏற்கெனவே இலங்கை இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அமைப்பு முறையில் தீர்வுகாண 80 சதவீத மக்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர் என ஜனாதிபதி ஒரு கூட்டத்தில் கூறிய கருத்தை நிராகரித்துள்ள சோமவன்ஸ - ஜனாதிபதியின் கூற்றுப் பொய்யென்று தெரிவித்துள்ளதுடன், இத்தகைய சமஷ்டி முறையிலான தீர்வை தாம் வன்மையாக எதிர்ப்பதாகவும் இதற்கு எதிராக மக்களை அணிதிரட்டப்போவதாகவும் கூறியுள்ளார்.

அதுமட்டுமல்ல, ஜே.வி.பி அரசின் பங்காளியாக இருந்தாலும், அது போடும் தாளத்திற்கெல்லாம் ஆடப்போவது கிடையாது என்றும் அலறியுள்ளார்.

இந்தவகையில் இனவிவகாரம் தொடர்பாக இந்த அரசோ, இன்றைய ஜனாதிபதியோ எந்தவிதமான சமாதான முயற்சியையும் முன்னெடுக்கவோ, இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் தீர்வுகணவோ ஜே.வி.பி அனுமதிக்கப்போவது கிடையாது என்பதை தெளிவாக உணரக்கூடியதாக உள்ளது.

இனப்பிரச்சினையைத் தொடர்ந்தும் தக்கவைத்திருப்பதன் மூலம் அரசியல் நடத்த திட்டமிட்டுள்ள ஜே.வி.பி யின் நோக்கம், இந்த நாட்டை மீண்டும் யுத்த பூமியாக்குவதையே கொண்டதாக உள்ளது என்பதையே உணர்த்துவதாகவுள்ளது.

இடைக்கால நிர்வாக சபையை, பொதுக்கட்டமைப்பை, சமஷ்டிமுறையிலான தீர்வை, இன்னோரன்ன சமாதான முயற்சிகளை எதிர்த்து நிராகரிக்கும் அரச பங்காளியான ஜே.வி.பி, நாடு பிரிவதற்கான - தமிழீழ தனிநாடு அமைவதற்கான பாதையை நோக்கியே தமிழ் மக்களை செல்லவைக்க அழுத்தம் கொடுக்கிறது என்றே கூறவேண்டும்.


பேரினவாதிகள் அதனை விரும்புவார்களெனில் தமிழ் மக்களுக்கும் அதனை விட மாற்றுவழி இருப்பதாக தெரியவில்லை...

இனவெறியர்களோடு பேசுவது சாத்தியமேயில்லையெனில் போராடி விடுதலையை வெல்வதே சரியான வழியாகும்.

ஜே.வி.பி யின் இனவாத விஷம்கக்கும் தலைமை இதனை உணர்வது நல்லது.

# நாடும் நடப்பும்

செய்தி :- சுனாமி நிவாரணத்திற்காக உலகநாடுகள் அரசுக்கு வழங்கிய உதவிகள் தவறான பேர்வழிகளால் கையாளப்படுவதாக மக்கள் விசனம்...



## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# களவும் கொள்ளைகளும் பெருகுது; பாதுகாப்பில்லாத படைகள் எதற்கு!

இப்பொழுது யாழ்ப்பாணத்தில் திருடர்களும், கொள்ளையர்களும் அதிகரித்துவிட்டார்கள். போகிற போக்கைப் பார்த்தால் ஒரு வீடு, அல்லது ஒரு கோயில்கூட திருடர்களிடமிருந்து தப்பமுடியாது போலிருக்கிறதே என்று சொல்லிக்கொண்டே வந்தார் பரமசிவம்.

யாழ்ப்பாணத்தில் மட்டும்தானா? குடாநாடு முழுவதிலும் மட்டுமல்ல மட்டக்களப்பு, கல்முனை, திருகோணமலை, வவுனியா என்று பாதுகாப்புப் படைகளின் பாதுகாப்பு இருக்கும் இடங்களிலெல்லாம் தினமுட திருட்டு நடந்துகொண்டிருக்கிறது. சிலர் இதை வெளியே சொல்ல முடியாமலுள்ளனர் என்றேன்.

இந்தத் திருடர்கள் எப்படி உள்ளே நுழைகிறார்கள் என்பதே தெரியாமலிருக்கிறது. இவைதவிர வழிப்பறிக் கொள்ளைகளும் அதிகரித்துக்கொண்டேயிருக்கிறது. திருட்டு, கொள்ளை போதாதென்று கிழக்கில் கொலைகளும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. காவல்துறையினரிடம் புகார் செய்தால் பதிந்துவிட்டு பார்க்கிறோம் என்கிறார்கள். அவர்கள்தான் எதை எதையென்று பார்ப்பார்கள் என்றார் பரமசிவம்.

பாதுகாப்புப் படைகளின் பாதுகாப்பு பலமாக உள்ள அதாவது அரசின் வார்த்தைகளில் சொன்னால் விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்டெடுத்த பகுதியென்றும், சங்கரியாரின் பாஷையில் சொல்வதானால் ஜனநாயக சுதந்திரமுள்ள பகுதியென்றும் சொல்லப்படும் பகுதிகளில்தான் களவும், கொள்ளையும், கொலையும் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது என்று சொல்லுகிறீர் என்றேன்.

நான் சொல்வதில் என்ன தவறு? விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியில் இப்படி தினமும் களவும், கொள்ளைகளும், கொலைகளும் நடைபெறுகின்றனவா? கழுத்து நிறைய நகைகளைப் போட்டுக்கொண்டு வன்னியில் பெண்கள் கோயில்களுக்கும், திருமணக் கொண்டாட்டங்களுக்கும் பயமில்லாமல் போய் வரவில்லையா? இங்கே பன்றித்தலைச்சி அம்மன் கோயிலுக்குப்

போன சில பெண்களின் தாலிக்கொடியை அறுத்திருக்கிறார்கள். பச்சைப் பாலகனின் கையிலிருந்த சங்கிலியைக் கழற்றியிருக்கிறார்கள். யாழ்ப்பாண நகரில் ஒரு வீட்டில் நகைகள், பணத்தைத் திருடியதுடன் வீட்டிலிருந்த நல்ல நூல்களையும் கொண்டுபோயிருக்கிறார்கள் என்றார் பரமசிவம்.

படித்த திருடர்களாயிருக்கும். தமிழ்ப் புத்தகங்களானபடியால் தமிழ் படித்த திருடர்களோ, தமிழ் படிக்க விரும்பும் திருடர்களோ தெரியவில்லை என்றேன்.

அம்மன் கோயில்கள் இரண்டில் ஒரே இரவில் திருட்டுப் போயிருக்கிறதே இவர்கள் பக்தித் திருடர்கள் என்றா சொல்வது. நக்குகிற நாய்க்குச் செக்கென்ன சிவலிங்கமென்ன? களவெடுக்கப்போகிறவனுக்கு எது கிடைக்குமோ அதை எடுக்கவேண்டுமென்பதுதானே அவனது இலட்சியம் என்றார் பரமசிவம்.

முன்பெல்லாம் அதாவது உலகப் போருக்குப்பின் இப்படி ஊர்களில் களவும், கொள்ளையும் சிலகாலம் அதிகரித்தது. சில சமயங்களில் ஊருக்கு ஊர் சுயபாதுகாப்புத் தேடினர். அதாவது ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு பகுதியிலும் ஊர்ப் பெரியவர்களும், இளைஞர்களும் கூடி அந்தந்தப் பகுதியில் தொண்டர் அமைப்புக்களை ஏற்படுத்திக் கொண்டனர். இந்த அமைப்புகளில் மக்கள் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படுவர். இவர்களில் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் முறைவைத்து இரவில் காவல் கடமையிலீடுபடுவர். சமீபத்திலும்கூட சில ஊர்களில் இப்படிக் காவல் படைகளை ஊர்மக்கள் தெரிவுசெய்து காவல் செய்து களவு, கொள்ளைகளைத் தடுத்தனர் என்றேன்.

இப்போதும் ஊருக்கு ஊர் இப்படி அந்தந்தப் பகுதி மக்கள் சேர்ந்து தமக்குள்ளேயே ஊர்மக்களைக் கொண்ட காவல் படைகளை நியமித்து ஊரைக் காவல் செய்து களவு, கொள்ளைகளைத் தடுக்கலாம் என்று சொல்கிறீர். இரவு நேரத்தில் வெளியார் எவரும் தகுந்த காரணமின்றி அந்த ஊருக்குள் நுழைய முடியாது என்றார் பரமசிவம்.

முன்னர் அப்படிச் செய்யக்கூடியதாக இருந்தது. இப்பொழுது ஒவ்வொரு ஊரிலும் மூலை முடுக்குகளிலெல்லாம் "பாதுகாப்பு" என்று சொல்லி படைமுகாம், பொலிஸ் முகாம் பாதுகாப்பு அரண் கட்டி "கண்துஞ்சாமல்" பார்த்துக்கொண்டிருக்கின்றன. நாங்கள் இங்கிருக்கையில் நீங்கள் ஊரில் காவற்படை அமைப்பதா என்று கேட்கமாட்டார்களா, தடுக்க மாட்டார்களா? இவர்களின் அனுமதியின்றி ஊரில் காவல் செய்ய இவர்கள் விடுவார்களா? என்றேன்.

இப்படியான சிக்கல் இருக்கிறதோ? என்ற பரமசிவம் பாதுகாப்புப் படைகள் பாதுகாக்கத் தவறியதால்தானே நாங்கள் எமக்குள்ளேயே பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்கிறோம். அவர்களால் எங்களைப் பாதுகாக்க முடியாவிட்டால் போகட்டும் நாங்கள் எங்களைப் பாதுகாத்துக் கொள்ளுவோம் என்றார்.நீர் இப்படிச் சொன்னால் விடுதலைப் புலிகளின் தூண்டுதலால் அல்லது அவர்களின் பின்னணியிலிருந்து செயற்படுகிறீர் என்று இனவாத ஊடகங்களும், சங்கரியாரும் குரல் கொடுப்பினம் என்றேன்.

இப்பொழுது விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்ட தமிழர் தாயகப் பிரதேசத்தில் இப்படித் திருட்டுக்களும், கொள்ளைகளும், கொலைகளும் நடைபெறுகின்றனவா? இல்லவே இல்லை. 1995 ஆம் ஆண்டுக்கு முன்னர் விடுதலைப் புலிகளின் நிர்வாகத்திலும், பாதுகாப்பிலும் யாழ்ப்பாணம் இருந்தபோது நல்லூர்த் திருவிழாவுக்கு கழுத்து நிறைய நகைகள் அணிந்து கொண்டு பெண்கள் நள்ளிரவில் தனியாகப் பயமின்றிச் சென்றுவரவில்லையா? என்று கேட்டார் பரமசிவம்.

நீர் சொல்வதெல்லாம் நூற்றுக்குநூறு சரி. இதை மக்கள் தான் உணரவேண்டும். பாதுகாப்பில்லாத பாதுகாப்புப்படைகள் தமிழர் தாயகத்துக்குத் தேவையில்லை. பாதுகாப்புப்படைகளுக்கும் நிம்மதியில்லை, மக்களுக்கும் நிம்மதியில்லை. பாதுகாப்புப் படைகளை அரசு இந்தப் பகுதியிலிருந்து விலக்கிக் கொள்வதுதான் நாட்டின் அமைதிக்கும் நல்லதென்று மக்கள் அரசுக்கு உணர்த்தவேண்டும். களவும், கொள்ளையும், கொலையும் தான் ஜனநாயக சுதந்திரம் என்று சங்கூதியார் விரும்பினால் அது அவர் அனுபவிக்கட்டும். எங்களுக்கு வேண்டாம் என்று மக்கள் குரல் கொடுக்கவேண்டும் என்றேன்.

இந்தப் பாதுகாப்புப் படைகள் எமது மண்ணில் அத்துமீறி வீடுகளில் குடியிருப்பது ஐ.நா மனிதஉரிமை விதிகளுக்கு முரணானது என்பதை மனித உரிமைக்குழுப் பிரதிநிதி ஏற்றுக்கெண்டிருக்கிறாராம் என்றார் பரமசிவம்.

# வாசகர் நோக்கு

## சபிக்கப்பட்ட சனங்களின் பாவப்பட்ட பாதை

இடையிடையே இரு புறமும் முட்புதர்கள் மண்டி இடறி விழுந்தும் கற்களும் கிடங்குகளுமாய் ஆங்காங்கே ஒடுங்கி சமச்சீரற்று விளங்கும் புராதன கிரவல் வீதியே செம்பிகலட்டி ஒழுங்கை. இது இடைக்காடு கிராம அலுவலர் பிரிவின் பிரதான தெருவிலிருந்து தம்பாலை, கதிரிப்பாய், வளலாய் கிராம அலுவலர் பிரிவுகளை ஊடறுத்துச் செல்லும் குறிப்பாக - விவசாயிகளின் அதிக நடமாட்டமுள்ள குறுக்கு வீதியாகும்.

வலிகாமம் கிழக்குப் பிரதேசசபை, அச்சுவேலி உப அலுவலகத்தின் பராமரிப்பு உரித்துப் பெற்ற இந்த ஒழுங்கையானது எமது நினைவறிந்த காலத்திலிருந்து எவ்வித புனரமைப்புக்கும் உட்படுத்தப்படவில்லை. சிரமதானப் பணிகள் மூலமாக ஓரளவிற்கேனும் எப்போதோ இதனைச் செப்பமிட்டிருக்கலாம் தான். இந்தக் குறுக்க வீதியின் இரு அந்தத்திலும் செயல்திறன் வாய்ந்த இருசனசமூக நிலையங்கள் இயங் கிக் கொண்டிருப்பினும் இது கைகூடவில்லை . ஒருசிலரது வீதியோர எல்லை ஆக்கிரமிப்பும், கணிசமானோரின் அப்பட்டமான சுயநலன் சார்ந்த ஒத்துழைப்பின்மையும் இடையூறாய் அமைந்திருந்ததே முக்கியகாரணம். கவனித்துக் கருமமாற்ற வேண்டிய உள்ளூராட்சி சபையும் முறையீடுகளை உதாசீனம் செய்து வருவது வழமையாகிப் போனது.

மிக அண்மையில் - இருவாகனங்கள் விலத்தி வழிவிட்டுச் செல்ல இயலாத குறிப்பிட்ட சில இடங்களில் தனியொரு பாரவூர்தி நகர முடியாது செருகித் தரித்துவிடக் கூடிய இந்தக் குறுகிய வீதியில் பொறுப்பற்ற விதத்திலும், பொது நலன்களைப் புறந்தள்ளியும் போக்குவரத்துத் தடத்திலேயே மின் கம்பங்கள் நிறுத்துவதற்கான இரு குழிகள் அகழப்பட்டுள்ளன. இதற்கான அட்சேபணை உடனடியாக உரிய விதத்தில் உரித்துடைய பிரதேச சபை அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அவர்களும் வந்து போனார்கள் இவர்களும் போய் வந்தார்கள் தற்போது அதே இடங்களில் கம்பங்கள் நிறுத்தப்பட்டும் விட்டன .

கூடிய விரைவில் வீதி விசாலிக்கப்படும் போது நிறுத்திய மின் கம்பங்களைப் பின் நகர்த்திக் கொள்ளலாம் என்றவாறான சமரசம் பிரதேசசபை செயலாளருக்கும், மின்சாரசபை பொறியியலாளருக்கும் இடையில் ஏற்பட்டுள்ளதாக அறிய முடிந்தது. எழுத்து மூலம் அல்லாத இக் கூற்று நடைமுறைச் சாத்தியமானதா? ஏப்ரல் - 1 தான் தொடர்ந்து வரும் நாட்களா ? எம்முள் எழுந்திருக்கும் ஐயங்கள் இவை .

பூனைக்கு யார் மணி கட்டுவது என்று சஞ்சலப்பட்டே அக் கருமத்தைக் கை விட்ட எலிகளின் கதை அநேகருக்கும் தெரிந்திருக்கும். நாம் எலிகள் அல்லர் !

*செம்பிகலட்டி -* *மக்கள்*
*இடைக்காடு .*

# நூல் அறிமுகம்

நூல் :- சுனாமி
நூலாசிரியர் :- கலாநிதி கந்தையா குணராசா
வெளியீடு :- கமலம் பதிப்பகம், 75/10 A, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.
விலை :- 350/-
192 பக்கங்கள், 16 பக்க வர்ணப் படங்கள், 32 பக்க கறுப்பு, வெள்ளைப் படங்கள்.




இந்து சமுத்திரப் பிராந்தியத்தைக் கலக்கி ஓய்ந்த 26, டிசம்பர், 2004 சுனாமி அனர்த்தம் குறித்து வெளிவந்திருக்கும் அறிவியல் சார் விவரண நூல் சுனாமி கடற்கோளாகும். இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் 26, டிசம்பர், 2004ஆம் திகதி பெரும் உயிரழிவையும், சொத்தழிவையும் ஏற்படுத்திச் சென்ற சுனாமி ஆழிப்பேரலை பற்றி அனைவரும் அறிந்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எங்களுடைய இளம் சந்ததியினர் அறிவியல் பூர்வமாக அறிந்து கொள்ளவேண்டிய அத்தியாவசியம் ஏற்பட்டுள்ளது என, ஆசிரியர் கலாநிதி க.குணராசா தனது முன்னுரையில் குறிப்பிட்டுள்ளது ஏற்புடையது. சுனாமி என்ற இந்த நூலில் புவியின் உள்ளமைப்பு, மிதக்கும் புவியோடு, கண்டங்கள் நகர்கின்றன, புவித்தகட்டோடுகள், தகட்டோடுகளின் நகர்வுகள், புவிநடுக்கங்கள், சுனாமிப் பேரலை, சுமாத்திராச் சுனாமி, சுனாமியின் விளைவுகள், பேரலைப் பேரழிவுகள்,. இலங்கையில் சுனாமி பேரழி வுகள், சுனாமியிலிருந்து பாதுகாப்பு என பன்னிரண்டு அத்தியாயங்கள் ஏராளமான விளக்கப் படங்களுடன் உள்ளன. எளிமையான நடையில் இந்த அறிவியல்சார் விவரண நூல் ஆக்கப்பட்டுள்ளது. இந்த நூலின் ஆசிரியர் இலங்கையின் புகழ்பூத்த எழுத்தாளராக விளங்குவதால், இந்தப் புனை கதைசாரா நூலைச் சகலரும் படித்தறியத்தக்க மொழிநடையைப் பின்பற்றியுள்ளார். அனைவரும் கற்கவேண்டிய நூல்.

**மகாலிங்கம் பிரவீணன்**

## திருக்கணித பஞ்சாங்கம்

நூல் :- திருக்கணித பஞ்சாங்கம் (2005-06)
நூலாசிரியர் :- சிதம்பரநாதக் குருக்கள்
வெளியீடு :- திருக்கணித நிலையம் மட்டுவில் -சாவகச்சேரி
விலை : 120/-




வானில் நிகழும் கிரகங்களின் அசைவுகளையும், மாற்றங்களையும் துல்லியமாக அறிந்து கொண்டு - நாள், முகூர்த்தம் பார்த்து நற் கருமங்கள் செய்ய முக்கிய பங்கு வகிப்பது பஞ்சாங்கம். இலங்கையில் தமிழில் திருக்கணிதம், வாக்கியம் என இரு பஞ்சாங்கங்கள் வெளிவருகின்றன. இலங்கையில் சுமார் 115 வருடங்களுக்கு முன்பிருந்தே திருக்கணிதமுறை அறிமுகப்படுத்தப்பட்டு, திருக்கணித பஞ்சாங்கம் வெளிவருகிறது.

கடந்த 07.05.2003 நடந்த புத சந்தரணம் எனும் புதன் - சூரியன் சேர்க்கையும், 08.06.2004 இல் நிகழ்ந்த சுக்கிரன் - சூரியன் சேர்க்கையும், திருக்கணித பஞ்சாங்கப்படி சூரியன் சேர்க்கையும், திருக்கணித பஞ்சாங்கப்படி (இரு கிரகங்களும் ஒரே பாகையில் இருந்தமை) சரியாகக் காட்டப்பட்டிருக்கிறது. இதுவே திருக்கணிதம் சரி என்பதற்குச் சாட்சியாகும்.

சூரிய - சுக்கிர சேர்க்கையினால் கடற்கோள் போன்ற இயற்கை அனர்த்தம் ஏற்படுமென இந்தியாவில் வெளிவரும் சோதிட சஞ்சிகையில் குறிப்பிட்டிந்ததும் இங்கு கவனிக்கத்தக்கது.

புதுவருட பஞ்சாங்கத்தில் வழமையான விஷயங்களுடன் குழந்தை பிறந்த நேரத்தைக் கொண்டு, நேரடியாக லக்கினத்துக்கு உரிய நேரத்தை நேராகப் பார்த்தறியவும், உதயலக்கின பதகமும் கிரகங்களின் நிலைகளைத் தினமும் பாகை கலையுடன் பார்த்து கிரகஸ்புடம் கணிப்பதற்கு கிரக நிரயன ஸ்புடங்களும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் விரத நிர்ணயங்கள் சரியான முறையில் கணிக்கப்பட்டு வெளிவருவதும் திருக்கணித பஞ்சாங்கமேயாகும்.

பார்த்திப வருஷ திருக்கணித பஞ்சாங்கம் 118 ஆம் வருடப் பிரசுரமாக "வேதாகம சோதிட பூஷணம்" "கலாபூஷணம்" சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்களின் கணிப்பில் வெளி வந்துள்ளது. இந்தத் திருக்கணித பஞ்சாங்கம் யாவருக்கும் பயன்தரும் என்பதில் சந்தேகமில்லை.

# இந்த வார பலன்
# 08-04-2005 - 14-04-2005

| | | | |
|---|---|---|---|
| சூ, சந், புத, சுக் ராகு | | | சனி |
| யுரே | 09 பக 11 - 02 மே - சந்<br>11 மா 5 - 31 இட - சந்<br>10 பி.கு 4 - 57 மே - சுக<br>13 இ 12 - 39 மே - சூரி<br>13 பி.கு 3 -04 மிது - சந் | | |
| செவ். நெப். | | | |
| | | | குரு கேது |

### மேடம்
*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் பிறந்தவர்களுக்கு கும்பத்தில் அடிக்கடி கருத்து வேறுபாடுகள் தலை தூக்கும். புத்திரர்களால் செலவுகளும், கஷ்டங்களும் ஏற்படும். எதிர்பார்த்த கருமங்கள் கைகூடுவதில் தாமதம்காணும். பிரயாணங் களாலும் பல சிரமங் கள் தோன்றும். தேகசுகமும் சிறப்பாக இராது. திருமணப் பேச்சுக்கள் கால தாமதத்தைக் கொடுக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். அதிகாரிகள் கடுமையாக நடந்து கொள்வர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தமாகவே இருக்கும். வங்கி நிலையும் சிறப்பாக இராது. தொழிலாளர்களுக்கு தொழிலில் வெறுப்பு ஏற்படலாம். மாணவர்கள் சொந்த ஊக்கத்துக்கேற்ப முன்னேற்றம் காண்பர்.

### இடபம்
*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இடபராசியில் ஜனனமானவர்களுக்குக் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பணவருவாய் சிறப்பாக அமையும். புத்திரர்களால் மகிழ்ச்சியும், கௌரவமும் கிட்டும். வீட்டில் இனபந்துகளின் வரவால் குதூகலம் நிறையும். நினைத்த கருமங்கள் தங்குதடையின்றி நிறைவு பெறும். தேகசுகம், குடும்பசுகம் சிறப்பாக இருக்கும். மங்கள கருமத்தை எதிர்பார்த்திருப்போருக்கு கருமம் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு, சிறப்பான ஊதியம் கிடைக்கும். மக்கள் மத்தியில் பாராட்டுதல்கள் கிட்டும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். வங்கி உதவிகளும் உண்டு. தொழிலாளர் மத்தியில் ஊக்கமும், நிறைந்த வருவாயும் கிட்டும். மாணவர்களுக்குக் கல்வி முன்னேற்றம். பரீட்சைகளில் சித்தி உண்டு.

### மிதுனம்
*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர் பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



மிதுன ராசிக் காரருக்கு குடும்பத்தில் பல தொல்லைகள். பிரச்சினைகள் தலை தூக்க இடமுண்டு. வருவாய் ஓரளவு இருப்பினும் செலவு அதிலும் கூடுதலாக இருக்கும். புத்திரர்களால் உதவி கிடையாது. தேகசுகமும் இடையிடையே பாதிக்கப்படலாம். குடும்பப் பெண்கள் விரக்தியுடன் காணப்படுவர். திருமணப் பேச்சுக்கள் தாமதத்தின் மேல் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகத்தில் நிம்மதி குறைவாகவே இருக்கும். அதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகமாகும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் குறையும். பணக் கஷ்டங்கள் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றத்துக்கு ஊக்கம் தேவை.

### கடகம்
*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடகராசியினருக்கு குடும்பத்தில் நிம்மதி குறைவாகவே இருக்கும். அடிக்கடி சச்சரவுகள் தோன்றும். செலவுகள் தம்மையறியாமல் அதிகரித்துக் கொண்டு போகும். புத்திரர்களாலும் நன்மை குறைவாகவே இருக்கும். குடும்பப் பெண்கள் சிக்கனத்தைக் கடைப்பிடித்தல் நன்று. திருமணப் பேச்சுக்கள் இழுபறி நிலையைக் காட்டும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் பல பிரச்சினைகள் ஏற்பட்டாலும், சமாளிக்கக் கூடியதாக இருக்கும். அதிகாரிகளின் போக்குக்கேற்பஇதமாக நடந்து கொள்ளுதல் நன்று. வர்த்தகர்களுக்கு வியாபாரம் குறைவாக இருக்கும். வாடிக்கையாளர்களைக் கவரக் கூடியதாக இருத்தல் நன்று. தொழிலாளர் மத்தியிலும் முயற்சி எடுக்க வேண்டும்.

### சிங்கம்
*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*




சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் ஒற்றுமை வலுக்கும். பணவருவாய் சிறப்பாக இருக்கும். புத்திரர்களாலும் இனத்தவர்களாலும் உதவிகள் கிட்டும். தேகசுகம் பாதிப்படையாமல் இருக்கும். திருமணப் பேச்சுக்கள் கைகூட வாய்ப்புகள் உண்டு. உத்தியோகத்தர்களுக்கு வரவேற்புகள் கிடைக்கும். வசதியான பதவிமாற்றம் ஏற்படும். அதிகாரிகளும் அன்புடன் நடந்து கொள்வர். வர்த்தகர்களுக்கும் வியாபாரம் நன்கு நடக்கும். வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகளும், வருவாயும் சிறப்பாக இருக்கும். மாணவர்களுக்கு கல்வி உயர்வு, பரீட்சைகளில் சித்தி உண்டாகும்.

### கன்னி
*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



கன்னி ராசியினருக்கு குடும்பத்தில் அந்நியோன்னிய உறவு வலுக்கும். பணவருவாய் சிறப்பாக இருக்கும். இன பந்துகளின் வருகையால் வீடுகள் கலகலப்பாக இருக்கும். புத்திரர்களால் உதவி கிட்டும். வீட்டில் நற்கருமங்கள் நடக்கலாம். விவாகப் பேச்சுக்கள் கைகூடி புது வாழ்க்கை ஆரம்பிக்கும். உத்தியோகத்தர்களுக்கு வருவாய் அதிகரிக்கும். வசதியான இடமாற்றங்கள் கிடைக்கலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நன்கு நடைபெற்று பணம் சேரும். தொழிலாளர்கள் திருப்தியுடன் பணிகளைச் செய்வர். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றம் நன்று. உயர் கல்வி கற்கும் அனுகூலங்கள் உண்டு.

### துலாம்
*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*



துலாராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் சிறு பூசல்கள் தோன்றி மறையும். வருமானத்திலும் பார்க்க செலவுகள் கூடுதலாக இருக்கும். எடுத்த கருமங்கள் தாமதத்தைக் காட்டும். புத்திரர்களால் செலவுகள் ஏற்படும். விவாகப் பேச்சுக்கள் தாதம நிலையிலேயே இருக்கும். உத்தியோ கத்தர்களுக்கு வேலைப்பளு கூடுதலாக இருக்கும். பொறுப்புக்களும் அதிகரிக்கும் . சக உதவிகள் குறையும். வர்த்தர்களுக்கு கையிருப்பிலுள்ள பொருட்களை விற்பனை செய்வதில் பல கஷ்டங்கள் தோன்றும். தொழிலாளர்கள்புதிய தொழில் களைத் தேடுவதில் அலைச்சல் கூடுதலாக இருக்கும். பிரயாசையின் மேல் தொழில் அனுகூலமாகும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் குறையும். பரீட்சைகளில் சித்தி சுமாராக இருக்கும்.

### விருச்சிகம்
*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



விருச்சிக ராசியினருக்கு குடும்பத்தில் இடையிடையே சச்சரவுகளும், நிம்மதிக்குறைவும் ஏற்படும் தேகசுகமும் பாதிக்கப்படலாம். பண வருவாய் இருப்பினும், சில சந்தர்ப்பங்களில் நிதி நெருக்கடி காட்டும். சிக்கனத்தைக் கடைப்பிடித்தல் நன்று. திருமணப் பேச்சுக்கள் விரைவில் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு தேவையில்லாத சச்சரவுகள் தோன்றும். அதிகாரிகளும் கடிணமாக நடந்து கொள்வர். வர்த்தகர்களுக்கு வியாபா ரம் ஓரளவு நன்றாகநடக்கும். எனினும் கடன் வியாபாரத்தைத் தவிர்க்கவும் தொழிலாளருக்கு தொழில் வாய்ப்புகள் உண்டு. மாணவர்களுக்கு சோம்பல் தன்மையால் முன்னேற்றம் தடைப்படும்.

### தனுசு
*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



தனுசு ராசியினருக்கு குடும்பத்தில் மனச்சந்தோஷ மும், நிம்மதியும் கிட்டும். பணவருவாய் திருப்திகரமாக இருக்கும். தொட ங்கும் கருமங்கள் தங்குதடையின்றி நிறை வேறும். பெரியோர்களால், புத்திரர்க ளால் உதவி கிடைக்கும். தேகசுகம் நன்று. திருமணப் பேச்சுக்கள் கைகூடும். உத்தியோகத்தர்க ளுக்கு தொழில் மாற்றங்களும் , உயர்ச்சிகளும் ஏற்படும். பொதுமக்க ளின் பாராட்டுதல்கள் கிடைக்கும். வர்த்தகர்களுக்கு பழைய முதலீடுகள் விற்பனையாகி லாபந்தரும். அலங்காரப் பொருட்கள் விற்பனை செய்வோர் கூடியலாபம் பெறுவர். தொழிலாளர் மத்தியில் முன்னேற்றம் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றமும், பாராட்டுதல்க ளும் கிடைக்கும்.

### மகரம்
*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங் கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகரராசியில் ஜனனமானவர்களுக்கு பல வழிகளாலும் நன்மைகள் ஏற்படும். குடும்பத்தில் குதூகலம் மகிழ்ச்சி இருக்கும். நண்பர்கள், புத்திரர்கள் உதவுவார்கள். வெளிநாடுகளிலிருந்து நற்செய்தி வரும். வருவாய் மென் மேலும் சிறக்கும். திரு மணங்கள் மிக விரைவில் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் வரவேற்பு இருக்கும். பதவி உயர்வுகள் கிடைக்கலாம். அதிகாரிகளும் ஒத்துழைப்பர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். தொழிலாளர் தமது தொழிலில் முன்னேற்றமடைவர். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றம், ஞாபக சக்தி சிறப்பாக அமையும்.

### கும்பம்
*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*



கும்பராசிக்காரர்களுக்கு பல வழிகளிலும் அமைதிக்குறையேற்படும். குடும்ப வாழ்க்கையில் அந்நியோன்யம் குறையும். பண வருவாய் மத்திமமாகவே இருக்கும். தொடங்கும் கருமங்கள் நிறை வேறுவதில் தாமதம் காணும். எதிர் பாராத செலவுகள் தவிர்க்க முடியாமல் இருக்கும். குடும்பப் பெண்கள் விரக்தியுடன் காணப்படுவர். திருமணப் பேச்சுக்கள் தாமதமடையும். உத்தியோகத்தர்களுக்கு தமது கடமைகளில் பல சிரமங்கள் தோன்றும். வேலைப்பளுவும் அதிகமாகும். வர்த்தர்களுக்கு வியாபாரம் மந்தநிலை காட்டும். தொழிலாளர் மத்தியிலும் திருப்தியின்மை காணப்படும். மாணவர்கள் மன நிம்மதிக் குறைவால் பரீட்சைகளில் சித்தி கிடைப்பது கடினம்.

### மீனம்
*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



மீனராசியினருக்கு குடும்ப வாழ்க்கையில் அமைதி நிலவும். மகிழ்ச்சியுடன் வாழ்க்கை நடக்கும். பணவருவாய் திருப்தியாக இருக் கும். இன சனக் கொண்டாட்டங்கள் அதிகரிக்கும். புத்திரர்களால் உதவி யும், மகிழ்ச்சியும் ஏற்படும். திருமணப் பேச்சுக்கள் வெற்றிகரமாக நிறைவு பெறும். உத்தியோகத்தர்களுக்கு செல்வாக்கு உயரும். அதிகாரிகளின் பாராட்டுகள் கிடைக்கும். வர்த்தர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடைபெறும். புதிய முதலீடுகளுக்கு நன்று. தொழிலாளர்களுக்கு வருமானம் அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் சிறப்புச் சித்திகள் கிட்டும். உயர் கல்விக்கேற்ற தராதரம் பெறுவர்.

# க.பொ.த (சா/த)ப் பரீட்சை முன்னணிப் பெறுபேறுகள்

நேற்று முன்தினம் வெளியான க.பொ.த. (சாதாரணதர)ப் பரீட்சையில் யாழ்ப்பாணம், தென்மராட்சி, வடமராட்சி, கிளிநொச்சி வலயங்களின் முன்னணிப் பாடசாலைகளின் பெறுபேறுகள் வருமாறு :

**யாழ். இந்துக் கல்லூரி**

த.அஜந்தன் 10A
கு.அமரேஸ் 10A
சா.நிஷாந்தன் 10A
ச.விதுஷன் 10A
சி.தேஜோமஜானந்தன் 10A
சி.யோகானந்தன் 10A

த.கோகுலன் 9A B
சு.தனுராஜ் 9A B
வி.தர்ஷன் 9A B
ஈ.துவாரகன் 9A B
க.முகிலன் 9A C
தி.பிரஷாந் 9A B
கி.ஜாதவராயன் 9A C
தா.பாலறூபன் 9A C
ப.ஜனார்த்தனன் 9A C
அ.அலெக்ஸன் 9A C
சி.சுலக்ஷன் 9A C
ந.திவாரகன் 9A C
ந.பிரகாஸ் 9A S

இ.சுர்யுன் 8A B C
ஜெ.ஜேசுதாஸ் 8A B C
க.கஜீபன் 8A B C
வி.அல்வின்யுவராஜ் 8A 2B
கி.கிருசன் 8A B C
க.ஜெனகன் 8A B S
த.ஜனந்தன் 8A B C
து.ஜயந்தன் 8A B C

ந.நவராஜகுமாரன் 8A 2B
ப.அரிராம் 8A B C
சி.அருணன் 8A B C
இ.நிருசன் 8A B C
க.நிசாந் 8A B S
ம.பிருந்தாபன் 8A C S
சே.செபிதன் 8A C S
இ.சிராஜ் 8A 2C
பே.தினேஸ்வரன் 8A 2C
கு.வஜிகுமார் 8A B C
வ.யோகதீசன் 8A 3C
சி.மதிசன் 8A B S
ப.பிரதீப் 8A 2B
ச.சஜீரதன் 8A C S

யோ.கஜீந்தன் 7A B 2C
எஸ்.இளமாறன் 7A 2B C
தி.கிசோக்குமார் 7A B 2C
சி.கஜீந்திரன் 7A 2B C
பி.அஜந் 7A B 2C
பா.அருமபுஜன் 7A 2B C
சி.மோகனராஜ் 7A 3C
ந.நவசாந்தன் 7A 2B C
கு.பிரஷாந் 7A 2B C
க.பிரணவரூபன் 7A 2B C
ஸ்ரீ.ஸ்ரீஜெயபவன் 7A 3B
ம.அருள்இனியன் 7A 2B S
சி.பாரதன் 7A 2B S

**வேம்படி உயர்தரப் பாடசாலை**

க.பூர்ணிமா 10A
அ.தர்சிகா 10A
கோ.கிருத்திகா 10A
ச.சிவமங்கை 10A
சு.சசிகலா 10A

ஜெ.இ.மிருணாளினி 9A C
இ.கஜித்தா 9A B
கு.கோபிகா 9A B
நி.கஜனி 9A C

ஸ்ரீ.மாதுரி 9A B
யா.துஷ்யந்தி 9A C
ந.சாலினி 9A C
தி.சங்கீதா 9A C
லோ.சிந்துரேகா 9A C
அ.காயத்திரி 9A C
இ.யசோதா 9A B

தி.தர்மிகா 8A 2C
ச.அபிராமி 8A B C
இ.கௌசினி 8A B C
யோ.நிரோஷிகா 8A 2B
தி.கல்யாணி 8A 2C

யோ.காயத்திரி 8A 2B
து.மஞ்சுளா 8A 2B
வி.தட்சாயினி 8A B C
கி.வனஜா 8A B C

சி.மைதிலி 7A 2B C
அ.துஸ்யந்தி 7A 2B C
இ.பிருந்தா 7A 2B C
ச.ஜெனனி 7A 2B C
ச.லிங்கசினி 7A 3B
மு.விஜித்தா 7A B C S
ஜெ.செந்தூரி 7A 2B
கோ.சத்தியகலா 7A 3B

த.சிவரூபினி 7A B 2C
சி.ஆரணி 7A 2B C
க.லக்ஷிதா 7A 3B
து.மயூரதி 7A 3B
பா.கௌந்திகா 7A 3B
ஜெ.மேகலா 7A 2B C
ஜெ.வேகலா 7A 3B
து.அபிராமி 7A B 2C
ம.ஜபிந்தா 7A 2B C
வ.கஜித்தா 7A 3B

ம.காமலிட்டா 6A 3B C
ச.பவித்திரா 6A 3B C
ச.கஜித்தா 6A 4B
கு.மீரா 6A 3B C
த.சிவதேவி 6A 3B S
கே.கம்சினி 6A B 2C S
ம.லாவண்யா 6A 4C
ச.சிந்துஜா 6A 3B S
செ.சுபாங்கி 6A 2B C S
த.தனுஜா 6A B 2C S
ம.அபிராமி 6A 3B C
ப.லிபித்தா 6A 4B

**க.பொ.த (சா/த)ப் பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களுக்கும் நமது ஈழநாடு சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்!**

ஜெ.மலர்மதி 6A 2B 2C
வி.புவி 6A 3B C
வே.சஜித்தா 6A 2B 2C
பு.சாலினி 6A 2B C S
சி.கஸ்தூரி 6A 4B
ஜெ.மேனகா 6A B 3C
த.துளசி 6A 2B 2C
ஜெ.வேம்பா 6A 3B C

**பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி**

வி.ஜீவன் 9A C
த.தயாபரன் 9A B
நி.வசிகரன் 9A B
அ.அமலஜெரோசன் 9A B
செ.வசிகரன் 9A B

ஸ்ரீ.நிமலன் 8A B C
க.நிதர்சன் 8A 2B
ஜெ.பூங்குன்றன் 8A 2B
கு.ரகுராம் 8A 2B
ர.ஜீவன் 8A 2B
பா.ஞானராஜ் 8A B C

செ.பிரதீன் 7A 3B
சி.பிரதீபன் 7A 3B
க.ரஜீவன் 7A B 2C
சி.அச்சுதன் 7A B C S

சி.ராசபுத்திரன் 7A B 2C
தி.துவாரகன் 7A B 2C
வே.ஜோன்மேரி 7A 2B C
சி.நெடுமாறன் 7A 2B S
சி.அகிலன் 7A B 2C
ந.கார்த்திக் 7A B 2C

**சென். ஜோன்ஸ் கல்லூரி**

ச.சாரியன் 10A
கு.டில்சன் 10A

ஸ்ரீ.ஜனார்த்தனன் 9A B
க.மாதவராஜன் 9A C
நி.ராஜ்குமார் 9A B
த.சஜீவன் 9A B
கு.சஞ்சிவா 9A S

ஜ.முத்துகுமார் 8A 2B
அ.மானுசுகிர்திரன் 8A B C
வ.சந்திரநாதன் 7A 3B
அ.கரிஸ் 7A B C S
இ.ஜானனன் 7A B 2C
வே.பிரநவன் 7A 2B C
ர.அனுசந்தன் 7A 2B C

**சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

அ.கார்த்திகா 10A
சு.தர்சிகா 10A
க.காயத்திரி 10A
நா.நிலாந்தினி 10A

த.ஜனுகன் 9A B
ச.சுகன்ஜா 9A C
வி.தனுசியா 9A B
பொ.றினோசா 9A C
இ.தீபனா 9A B
க.ஜெறிலா 9A B
ந.சுகிதா 8A B C

**யாழ். இந்து மகளிர் கல்லூரி**

ப.பாமினி 9A B
தே.கௌசிகா 8A 2B
த.கீர்த்திகா 8A B C
பூ.தர்சிகா 8A B C
பூ.ரோகினி 7A 2B C
சி.சிவரூபினி 7A 2B C
ஜெ.ஜனந்தவி 7A B 2C
சு.கஜானா 7A 2B S

**வடமராட்சி மத்திய கல்லூரி**

வி.நிஷாந்தி 10A
வ.நிவேதிகா 9A B
த.நிஷாந்தினி 9A B
க.கம்சிகா 8A 2B
அ.ரேணுகா 8A B C
து.தனுஜா 8A 2B
சி.யுகித்தா 8A 2B
த.மிதுலா 7A 2B C
ந.மேனகா 7A 2B C

**வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி**

தி.தாரணி 10A
இ.சுஜிதா 9A B
வே.சுகன்னியா 9A C
ப.பாரதி 9A C
செ.செல்வரஜிதா 8A 2B
த.வினோதினி 8A 2B
ப.சுவேந்தினி 8A B S
பா.மயூரி 8A B C
ம.சோபனா 7A B 2C

**கொக்குவில் இந்துக் கல்லூரி**

சி.வதனி 9A B
சி. வலஜி 8A 2B
ந.சிவாஸ்கர் 8A C S

**திருக்குடும்பக் கன்னியர் மடம்**

இ.பனுஜா 8A B C
ஜே.நிரோஜா 7A B 2C

**சுண்டுக்குளி மகளிர் கல்லூரி**

இ.சுபா 9A C
ஆ.சாமினி 9A S
கு.தர்சிகா 8A
ஞா.துவாரகஅக்னேஸ் 8A B C

**யாழ். மத்திய கல்லூரி**

ச. தவக்குமரன் 10A
க.விஜயராஜ் 9A B
பே.ரவிக்குமார் 7A B 2S
ச.சொமமன் 7A 2B S
ப.தர்சானந் 6A 2B 2C
இ.ஏபிரகாம் பிரசாத் 6A 4B
வை.எல்.சுரேந்தர் 6A 3C
ஜீ.பானுஜன் 5A 4B C
மு.மோகன்ராஜ் 5A 2B 2C S
சி.நியூறன் 5A B 2C S
பா.சாரூபன் 5A 3B C S
ச.கமல்றன் 5A 2B C 2S
சு.மயூரன் 5A 2B 2C
ப.சதீஸ்குமார் 5A 2B 2C S
ஜெ.வசந்தகுமார் 5A 2B 2C

**சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**

கு.குகானந் 8A 2B
செ.கஜநீதன் 7A 3B
சி.கோபிராஜ் 5A 4B C
ப.பிரிந்தா 5A 4B C
யோ.பிரியசாலினி 5A 3B 2C
சி.விஜயதீபன் 4A 4B S

**கிளிநொச்சி இந்துக் கல்லூரி**

ப.கோகுலன் 9A B
இ.சுரணுதா 6A 3B S
த. ஜெயரூபி 5A 2B 2C
நி. நிருத்திகா 4A 4B 2C
இ.கிறிசாந்திதா 4A 2B C 3S

**கிளி. சென் திரேசா பெண்கள் கல்லூரி**

கு.ஆண்டனுஷா 8A 2B
தி.ஆஞ்சனா 8A 2B
வி.திவ்வியா 4A 4B 2C
தே.மெடோனா சயந்தினி 4A 4B C S

**கிளி. மகா வித்தியாலயம்**

ப.நிருத்திகா 8A B C
நா.டிசெந்தினி 4A 2B C S

**கிளி. முழங்காவில் மகா வித்தியாலயம்**

கு. நிஷாந்தினி 8A B C
ச.நளினி 7A B C S
உ.சோபனா 4A 6C
நி.நிஷாந்தன் 4A 3B C
ந.தர்சிகா 5A 2B 3C

**கிளி. பளை மத்திய கல்லூரி**

பா.உதயேந்திரன் 4A 3B C S

**கிளி. வட்டக்கச்சி மகா வித்தியாலயம்**

ஞா.ஜகன் 8A B S
செ.சோபனா 4A B 3C 2S

**கிளி. மத்திய கல்லூரி**

வே. மயூரி 6A 3B S
ஆ.அபிராஜ் 5A 3B 2C
பா. நிஷாந்தினி 5A 3B C S
ச.அனுஷா 4A 3B 2C S

**கிளி. திருவையாறு மகா வித்தியாலயம்**

சண்முகநாதன் சுஜீவன் 7A 2B C
ச. கிரிராஜ் 6A 3B S
ப.கௌந்தினி 4A 5B S

**கிளி. உருத்திரபுரம் மகா வித்தியாலயம்**

மாணிக்கவாசகர் அருளினி 6A 3B C
மா.கார்த்திகா 5A 4B C
ர.விதுஷா 4A B 3C

**கிளி. இராமநாதபுரம் மேற்கு வித்தியாலயம்**

ம.துஷாந்தி 7A 2B C

**கிளி. கண்டாவளை மகா வித்தியாலயம்**

க.சுஜிந்தன் 5A 4C S
ப.சஜநாத் 4A B 5C

**கிளி. அக்கராயன் மகா வித்தியாலயம்**

செ. ஹொசிஸ்ரா 4A 2B 3C S
இ.துவாரகா 5A 2B 2C S

**கறுக்காய் தீவு அ.த.க. பாடசாலை**

பு.மோகனராஜ் 5A 3B C
ச.சிவரூபன் 4A 3B 2C

**கிளி. கனகபுரம் மகா வித்தியாலயம்**

க.பஞ்சன் 4A 4B C S
நா.கோணேசன் 4A 3B 3C
பெ.சதாசிவம் 4A B 4C

**கிளி. பூநகரி மகா வித்தியாலயம்**

ஆ.லோபன் 8A B
அ.துரைசிங்கம் 5A 3B 2C

**கிளி. இராமநாதபுரம் மகா வித்தியாலயம்**

ஹெ.ஜீர்த்திகா 4A B 4C S

**கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி**

ச.கம்சதனி 4A 2B 3C S
கு. குணயா 4A 3B 3C

**சாவகச்சேரி மகளிர் கல்லூரி**

கோ.தட்சாயினி 7A 3B
சு.சயித்தா 7A 2B C

**மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்**

ப.ஜனனி 9A S

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சுமாத்ரா பூகம்பத்தின் பின் இலங்கையில் மினி சுனாமி!

இந்தோனேஷியாவில் கடந்த மாதம் 28 ஆம் திகதி 8.7 றிச்டர் அளவுடைய பூகம்பம் ஏற்பட்டதைத் தொடர்ந்து இலங்கையின் தென்பகுதி கரையோரத்தில் மினி சுனாமி தாக்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாறா எனப்படும் கடல் வள ஆய்வு நிலையம் ஒன்றே இதுபற்றிய தகவலை நேற்று வெளியிட்டது.

கடந்த 28 ஆம் திகதி சுமாத்ராவில் பூகம்பம் ஏற்பட்டதைத் தொடர்ந்து இரண்டு மினி சுனாமிகள் இலங்கையைத் தாக்கின.

அதிகாலை 1.05 மணியளவில் கிரிந்த கரையோரப் பகுதியில் 2.3 மீற்றர் உயரத்துக்கு எழுந்த அலைகளும் அதையடுத்து அரை மணி நேரத்தின் பின்னர் கொழும்பு பகுதியில் அரை மீற்றர் உயரத்துக்கு மினி சுனாமி அலைகள் தாக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமாத்ரா பூகம்பம் ஏற்பட்டு சுமார் 3 மணி நேரத்தின் பின்னரே இந்த சுனாமி அலைகளின் தாக்கம் ஏற்பட்டது.

அத்துடன், கடற்படையினரும் இந்தப் பூகம்பம் ஏற்பட்ட பின்னர் கரையோரப் பகுதிகளில் 15 முதல் 20 நிமிடங்களுக்கு கடல் கொந்தளிப்பு காணப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

1883 ஆம் ஆண்டுக்குப் பின்னரே இலங்கையில் இரண்டு சுனாமிகளின் தாக்குதல்களே பதிவாகியுள்ளன.

# தேசிய பாடசாலைகளுக்கு அனுமதி: 12 ஆம் திகதிவரை விண்ணப்பங்கள்

(கொழும்பு)

அடுத்த வருடம் தேசியப் பாடசாலைகளில் மாணவர்களை தரம் ஒன்றுக்கு அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் காலம் எதிர்வரும் 12 ஆம் திகதியுடன் முடிவடைவதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கல்வியமைச்சு மேலும் தெரிவித்துள்ளதாவது -

தரம் ஒன்றுக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான இந்தக் கால எல்லை எந்தக் காரணத்தைக் கொண்டும் நீடிக்கப்படமாட்டாது.

இதுவரை அமைச்சுக்குக் கிடைத்த விண்ணப்பங்கள் தற்போது பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. இந்த நடைமுறையில் பழைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பத்திரிகைகளில் வெளியான புதிய மாதிரிப்படிவங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை புதிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்கவேண்டுமென அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை - முன்னைய படிவங்களை சமர்ப்பித்தோர் மீளவும் புதிதாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவேண்டுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

## சமாதானப் பேச்சு...

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென சர்வதேச சமூகத்தால் உறுதியளிக்கப்பட்ட பெருமளவு நிதி திரும்பி விடும் அபாயம் தோன்றியுள்ளது.

சர்வதேச நிதி உதவியினை சரியான முறையில் கையாள்வதற்குரிய அமைப்பு இல்லாமையால் அந்த நிதி உதவிகள் இதுவரை வழங்கப்படாமல் தேங்கியுள்ளது. விரைவில் இதற்குத் தீர்வு காணப்படாவிட்டால் அவை வேறு இடங்களுக்கு மாற்றப்படுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்தே சமாதான முயற்சிகளை ஆரம்பித்து அதனூடாகப் பொதுக்கட்டமைப்பொன்றை முதலில் உருவாக்கும் திட்டத்துக்கு அரசாங்கத் தரப்பு ஆதரவு வழங்கியுள்ளதாகவும் இந்த விடயம் தொடர்பான விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை அறியும் முயற்சியில் நோர்வே ஈடுபட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

புதுவருடத்தின் பின்னர் இது தொடர்பான தீர்க்கமான அறிவித்தல் ஒன்று வெளியிடப்படலாமென தெரியவருகிறது.

## கண்காணிப்புக்...

றவர்கள் தீவுச்சேனையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறித்தும் அவர்களுக்கு இராணுவம் உதவியளிப்பது குறித்தும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.


அத்துடன், உரிய சூழ்நிலை ஏற்படும் போது இடைநிறுத்தப்பட்டுள்ள விடுதலைப் புலிகளுக்கும் - படையினருக்கும் இடையிலான சந்திப்புக்கள் இடம்பெறும் என தாம் குறிப்பிட்டதாகவும் தெரிவித்த கேணல் பானு அது விரைவிலும் இடம்பெறலாம் என்றும் குறிப்பிட்டார்.

## பாப்பரசருக்கு...

பொது நிறுவனங்களையும் கறுப்பு மற்றும் வெள்ளைக்கொடிகளைப் பறக்கவிட்டும், சோககீதம் இசைத்தும் துக்கம் அனுஷ்டிக்குமாறு யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியமும், கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியமும் கேட்டுக்கொண்டுள்ளன.

இதேவேளை - பாப்பரசருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் யாழ். மற்றும் வன்னிப் பகுதிகளிலுள்ள கத்தோலிக்கத் தேவாலயங்களில் நித்திய ஆன்ம இளைப்பாறலுக்கான திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளன.

## மரண அறிவித்தல்



### சுப்பையா பொன்னுத்துரை

(உரிமையாளர், பொன்மலர் ஸ்ரோஸ், அளவை கொன்வெக்சனறி வெக்ஸ் (Sun Brand) அளவெட்டி)

அளவெட்டி வடக்கு பெத்தாவளையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா பொன்னுத்துரை அவர்கள் 06.04.2005 அன்று காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்டத்தரிப்பு வீதி,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

T.P No - 0602 - 212558
0773 - 024376

தகவல்
பொ.சகுந்தலாதேவி
(மனைவி)

(1116)

# குடாநாட்டில் 6 பிரதான வீதிகளை அகலப்படுத்துவதற்கு நடவடிக்கை!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் ஆறு பிரதான வீதிகள் அகலப்படுத்தப்படவுள்ளன. இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்றுக் காலை 10 மணிக்கு அரச அதிபர் தலைமையில் யாழ்.செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

கண்டி வீதி, யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் - பலாலி வீதி, யாழ்ப்பாணம் - பருத்தித்துறைவீதி, யாழ்ப்பாணம் - மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் - காரைநகர் வீதி, யாழ்ப்பாணம் - ஊர்காவற்துறை வீதி என்பனவே அகலப்படுத்தப்படவுள்ள வீதிகளாகும்.

இந்த வீதிகளை அகலப்படுத்தி, புனரமைப்பு வேலைகள் நீண்டகாலத்திட்டம், குறுகிய காலத்திட்டம் என்ற அடிப்படையில் நடைபெறவுள்ளன.

நீண்டகாலத் திட்டத்தில் வீதிகளை அகலப்படுத்தி, புனரமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்கான திட்டங்கள் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் ஊடாக தயாரிக்கப்படும். தற்போது குறுகியகால வேலைத்திட்டங்களுக்குரிய நிதியே கிடைக்கப்பெற்றுள்ளதால் குறுகியகால வேலைத்திட்டங்களுக்கு அமைவாகவே இந்த வீதிகள் அகலப்படுத்தப்பட்டு புனரமைக்கப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக யாழ். - கண்டி வீதி, முகமாலையிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான பகுதி அகலப்படுத்தப்படவுள்ளது. இந்தத் திட்டங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் காப் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நீண்டகாலத் திட்டத்தின் கீழ் இந்த வீதி 4 வழிப்பாதைகளைக் கொண்டதான 66 அடி பாதையாக அமையும். ஆனால், குறுகியகால திட்டத்தின் கீழ் இருவழிப் பாதைகள் கொண்டதாகவே அமைக்கப்படவுள்ளன. இதற்காக வீதியின் நடு மையத்திலிருந்து இரண்டு பக்கமும் 10 மீற்றர் வீதம் அகலப்படுத்தப்படும். நீண்டகாலத்திட்டத்தின்போது வீதியின் நடுமையத்திலிருந்து 15 மீற்றர் வீதம் அகலப்படுத்தப்படும்.

கண்டி வீதி அகலப்படுத்தல் நடவடிக்கையின்போது - யாழ். மாநகர சபை பகுதிக்குள் உள்ள கடைத்தொகுதிகள் மற்றும் நெருக்கமான குடியிருப்புக்களைக் கருத்திற்கொண்டு, மாற்றுவழிகள் மேற்கொள்ளப்படும். அதன் அடிப்படையில் செம்மணி அல்லது கொழும்புத்துறை ஊடாக கண்டி வீதியை அமைத்துச்செல்ல நடவடிக்கை எடுக்கப்படும்.

அவ்வாறே - சாவகச்சேரி நகரப் பகுதியை ஊடறத்து கண்டி வீதி இருப்பதால் சாவகச்சேரி நகரில் - அவ்வீதியில் நெருக்கமான கட்டடங்கள், கடைத் தொகுதிகளைக் கருத்திற்கொண்டு, அந்தப் பிரதேசத்தில் பிறிதொரு பகுதி ஊடாக கண்டி வீதியை அமைப்பது குறித்தும் தீர்மானிக்கப்படும். யாழ். கண்டி வீதி அகலப்படுத்தி, புனரமைக்கும் திட்டம் அடுத்த வருட இறுதிக்குள் நிறைவுசெய்யப்படும்.

இவ்வாறே ஏனைய ஆறு வீதிகளும் அகலப்படுத்தப்பட்டு, புனரமைக்கப்படவுள்ளன. இந்த வீதிகளும் மையத்திலிருந்து 10 மீற்றர் இருபக்கங்களும் அகலப்படுத்தப்படும்.

யாழ். - பருத்தித்துறை வீதி அகலப்படுத்தப்படும்போது - இராசவீதியை ஒரு கடுகதி பாதையாக அமைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் வீதிகளை அகலப்படுத்தும்போது பல தனியார் காணிகள் சுவிகரிக்கப்பட நேரிடும். அதற்கு காணி உரிமையாளருக்கு நஷ்டஈடு வழங்குவது தொடர்பாக உரியவர்களுடன் பேசி அவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன், நீண்டகாலத்திட்டத்தின் அடிப்படையில் எதிர்காலத்தில் மேலும் வீதிகள் அகலப்படுத்தப்படவிருப்பதால் குறித்த எல்லை வரம்புக்குள் எவ்வித கட்டடங்கள் அமைக்கவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

இந்த வீதிகள் அகலப்படுத்தப்படும் நடவடிக்கைகள் குறித்து அரச அதிபர் கருத்துத் தெரிவிக்கையில் -

இந்த நடவடிக்கைக்கு மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கி, குறுகிய காலத்துக்குள் இந்தத் திட்டங்கள் நிறைவு பெற தமது ஆதரவை வழங்கவேண்டும். இதன்மூலம் எதிர்காலத்தில் விபத்துக்கள் ஏற்படாமல் தடுக்க முடியும் எனத் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் - வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர் ஸ்ரீனிவாசன், வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் சி.பூ.சிவனேசன், யாழ். மாநகர ஆணையாளர் கலாநிதி கே.குணராசா, தமிழீழ நிர்வாகசேவைப் பொறுப்பாளர் விஜிதரன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், பிரதேச செயலர்கள், பிரதேசசபை செயலாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## நெதர்லாந்து...

மேற்கொண்ட சுற்றுப் பயணத்தின்போது அந்தப் பகுதிகளில் மக்கள் பட்ட இன்னல்கள் தொடர்பாகவும் அவர் அரசியற்துறைப் பொறுப்பாளரிடம் தெரிவித்தார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்கும் வகையில் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே பொதுக்கட்டமைப்பொன்றை ஏற்படுத்துவது தொடர்பாகவும் அவர் வலியுறுத்தினார்.

இரண்டு தசாப்த காலமாக வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்ற யுத்தம், பின்னர் சுனாமியால் மக்கள் படும் அவலம் என்பவற்றை எடுத்து விளக்கிய அரசியற்துறைப் பொறுப்பாளர் - சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை விடுதலைப் புலிகள், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்துடன் இணைந்து மேற்கொண்டதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் விடுதலைப் புலிகள் பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்கு நோர்வே தயாரித்த திட்டத்தை முழுமையாக ஏற்றுக்கொண்ட போதிலும், இலங்கை அரசாங்கம் அதனை இதுவரை ஏற்றுக் கொள்ளவில்லையெனவும் தெரிவித்தார்.

நேற்று நெர்லாந்து வெளியுறவு அமைச்சக அதிகாரிகளை அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் சந்தித்து கலந்துரையாடினர்.

## பேச்சை உடன்...

வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர். நோர்வேயின் தலையீட்டுடனேயே பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும்.

எனவே, எந்தக் கட்சி எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டிருந்தாலும் நாட்டு மக்களை மீண்டும் ஒரு யுத்த சூழலுக்குள் தள்ளிவிட அரசாங்கம் முனையாது.

சமாதான முயற்சியின் உண்மை நிலைகளை உணராது பேச்சுக்களை முன்னெடுத்துச்செல்ல முடியாது. இந்த உண்மை நிலைகளை உணராதவர்கள் இன்று அரசியலில் ஈடுபட்டுள்ளவர்கள்.

குண்டுகளை வெடிக்கவைத்தால், யுத்தம் மீண்டும் மூண்டால் அனைத்து செயற்பாடுகளும் சீர்குலையும். இதனை உணராத அரசியல்வாதிகள் இந்த நாட்டில் இருப்பவர்கள் என நான் நினைக்கவில்லை. அவ்வாறான முட்டாள் நான் அல்ல.

நோர்வேயை விரட்டிவிட்டே பேச்சுவார்த்தையை மேற்கொள்ள வேண்டும். நோர்வேயை விரட்டினால் விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தைக்கு வரமாட்டார்கள். வாக்குகள் தமக்கு அதிகம் கிடைக்க வேண்டும் என்று முட்டாள்தனமாக செயற்படக்கூடாது. சமாதான நிலையை உணர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும். நாட்டை காட்டிக்கொடுக்க சுதந்திரக்கட்சி தயாராக இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# பாப்பரசரின் இறுதி நிகழ்வில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

பாப்பரசர் இரண்டாவது ஜோன் போலின் இறுதிக்கிரியைகளில் பங்கேற்பதற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட்ட குழுவினர் நேற்று வத்திக்கான் பயணமாகினர்.

இந்தக் குழுவில் அமைச்சர்களான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, மில்ரோய் பெர்னாண்டோ ஆகியோரும், நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேராவும் இணைந்துள்ளனர்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி குருநாகலில் அரசாங்கத்துக்கு எதிராக நடத்தவிருந்த பேரணி பாப்பரசரின் இறுதிக்கிரியை நடைபெறுவதால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (01)

## தமிழீழ தேசிய தொலைக்காட்சிக்கான ஆளணி வேண்டுகைகள்

தமிழீழ தேசிய தொலைக்காட்சி சேவையில் பணிபுரிவதற்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

- செய்தி வாசிப்பாளர்
- நிகழ்ச்சி அறிவிப்பாளர்
- நிகழ்ச்சித் தயாரிப்பாளர்
- நிகழ்ச்சித் தொகுப்பாளர்

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
தகைமைகளுக்கு அமைய கொடுப்பனவு வழங்கப்படும்

விண்ணப்பங்களை :
விளம்பர இல :37
'நமது ஈழநாடு'
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு 15.04.2005 இற்கு முன் அனுப்பி வைக்கவும்.

நிர்வாகி, தமிழீழ தேசிய தொலைக்காட்சி.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 08.04.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# க.பொ.த.உயர்தரம் - மாதிரி வினாத்தாள் - 2005

## பகுதி I

# இரசாயனவியல்

அ.லோகநாதன் B.Sc, Dip-in.Ed.
யாழ். மத்திய கல்லூரி

**1.** A என்னும் மூலகத்தின் இறுதி $e^n$ நிலையமைப்பு $4d^{10}\ 5S^2$ ஆகும். Aற்கு அதிக ஒற்றுமையான இயல்புகளைக்காட்டக்கூடிய வேறு ஒரு மூலகம் எது?

1) Al 2) N 3) Cu 3) Cu 4) Zn 5) Pb

**2.** $S_2O_3^{2-}$ அயனின் வடிவத்தை ஒத்த வடிவமுடையது எவை?

1) $CO_3^{2-}$ 2) $SO_4^{2}$ 3) $CH_4$ 4) $XeF_4$ 5) 2ம், 3ம்

**3.** திண்ம உப்பு ஒன்று வெப்ப மேற்றப்பட்ட போது குறித்த ஓர் வெப்பநிலையில் முறையே 2:1;1 என்ற மூல் விகிதத்தில் A,L,N என்ற மூன்று வாயுக்களை சமநிலையில் விளைவாக்கியது. இவ்வெப்பநிலையில் கூட்டற்பிரிகையின் அளவு $\propto$, மொத்த அமுக்கம் P எனின் இச்சமநிலை மாறிலி Kpயின் கோவையாக அமையக்கூடியது பின்வருவனவற்றுள் எது? Kp=

1) $\frac{2\propto^2P^2}{4}$ 2) $\frac{4}{2\propto P}$ 3) $\frac{P^4}{16}$ 4) $\frac{P^4}{64}$ 5) $\frac{P^4}{(1-\propto)64}$

**4.** பின்வரும் VSEPR(VESPER) குறியீடுகளிற்குப் பொருத்தமான உதாரணங்கள் முறையே $Ax_3E_2$, $Ax_4E_2$, $Ax_3E_1$,

1) $Al_2O_3$, $CO_2$, $Na_3N$ 2) $Al_2O_3$, $PbO_2$, $K_3N$
3) $SO_3$, $CH_4$, $NH_3$ 4) $ICl_3$, $SF_4$, $NH_3$ 5) $ICl_3$, $XeF_4$, $PH_3$

**5.** P தொகுப்பு மூலகமொன்றின் இறுதி $e^n$ நிலையமைப்பானது $ms^xnp^y$ ஆகும். இங்கே m=n=(x+y)=3 எனின் இந்த மூலகமாக இருக்கக் கூடியது எது?

1) N 2) P 3) Al 4) B 5) AS

**06.** குறித்த ஒரு வாயுவின் $1.505 \times 10^{22}$ மூலக்கூறுகளின் திணிவு 0.425g எனின் அந்த வாயுவாக இருக்கக்கூடியது எது? (H=1, O=16, C=12, N=14)

1) $O_2$ 2) $O_3$ 3) $N_2$ 4) $NH_3$ 5) $CO_2$

**07.** முதல் வரிசைக்குரிய d-தொகுப்பு மூலகங்கள் பற்றிய தரவுகளில்

1) இவற்றின் d-$e^n$ கள் 4d ஒழுக்கில் நிரம்புகின்றன.
2) $Cu^+(aq)$, $Zn^{2+}(aq)$ இவை நிறமற்றவை
3) யாவும் உலோகங்கள் அல்ல
5) 2ம், 5ம் விடைகள் சரியானவை
4) $V^{3+}(aq)$, $Ni^{2+}(aq)$, $Fe^{2+}(aq)$ இன் நிறங்கள் முறையே பச்சை

**08.** $KFe_{(a)}[Fe_{(b)}(CN)_6]$ இல் Feகள் எடுகக்கூடிய ஒட்சியேற்ற எண்கள் முறையே

1) $+^a2$ $+^b2$ 2) $+^a3$, $+^b2$ 3) $+^a2$ $+^b3$, $+^a3 + {}^b3$
4) $+^a2$ $+^b3$ , $+^a3$ $+^b2$ 5) $+^a3$ $+^b2$, $+^a2$ $+^b2$

**09.** H - நிறமாலை தொடர்பான பின்வரும் தரவுகளில் சரி/சரியானவை எது/எவை?

a) சிவப்பு நிறக்கோட்டின் அலை நீளத்தை விட ஊதாவின் அலை நீளம் உயர்வு
b) லைமன் தொடர் கீழ்ச் செந்நிறப் பகுதியில் தென்படும்
c) கோடுகள் நெருங்கிச் செல்லும் திசையில் மீடிறன் கூடும்.
d) $H_\beta$ கோடு n=5 $\longrightarrow$ n=2ற்கு $e^n$ வரும்போது பெறப்படும்.

1) a,b,c 2) b,c 3) a,b 4) c 5) c,d

**10.** ஆவர்த்தன அட்டவணையில் 5ம் ஆவர்த்தனத்தில் உள்ள அணுக்களின் சக்தி மட்டங்களிற்கு $e^n$நிரம்பும் சரியான வரிசை எது?

1) 4S, 3d, 4P 2) 5d, 5s, 5p 3) 5s, 5p, 5d 4) 5s, 4d, 5p 5) 5s, 4f, 4d, 5p

**11.** 200 $Cm^3$ 0.2mol $dm^{-3}$ $H_2So_4$ கரைசலையும், 0.1 mol $dm^{-3}$ NaOH இன் 300$cm^3$ கரைசலையும் ஒன்று சேர்த்துப் பெறப்படும் கரைசலின் $P^H$ என்ன?

1) 2 2) 3 3) 1 4) 1.433 5) தரவு போதாது

**12.** C,H,O ஐ மட்டும் கொண்ட சேதனச் சேர்வை Aன் 0.610g இன் பூரண தகனத்தின் போது 1.54g $CO_2$ வாயு பெறப்பட்டது. Aஇன் சார் மூ.கூ.திணிவு 122 எனின் ஒரு மூலக்கூறு Aஇல் உள்ள C அணுக்களின் எண்ணிக்கை என்ன? (அவகாதரோவின் எண் $6.022 \times 10^{23}$=L)

1) 7L 2) 5L 3) 7 4) 5 5) மேலுள்ள எவையுமல்ல

**13.** நீரின் மாதிரி ஒன்று உலோக அயன் ஒன்றினால் மாசுபடுத்தப்பட்டுள்ளது. இக்கற்றயன் கரைசலின் சிறுபகுதிக்கு சிறிதளவு $NH_4OH(aq)$ சேர்த்த போது நீலநிறவீழ்படிவும், மிகை ConHCl சேர்த்த போது நீல நிறக்கரைசலும் பெறப்பட்டது. $H^+$ ஊடகத்தில் $H_2S$ வாயு சேர்க்க, வீழ்படிவு பெறப்படவில்லை. எனின், அந்தக் கற்றயன் எது?

1) $Ni^{2+}$ 2) $Cu^{2+}$ 3) $Zn^{2+}$ 4) $Fe^{2+}$ 5) $Co^{2}$

**14.** $N_2$ மூலக்கூறானது ஒரு சந்தர்ப்பத்தில் வெண்பொஸ்பரசு மூலக்கூற்றின் ($P_4$) கட்டமைப்பை ஒத்த கட்டமைப்பை உருவாக்குகின்றது என எடுத்துக் கொண்டால் N-N, N=N, N≡N பிணைப்புச்சக்திகள் முறையே +160, +410, +916 எனின் $N_{2(9)} \longrightarrow 1/2\ N_{4(9)}$ என்னும் தாக்கத்தின் நியம தாக்க வெப்ப உள்ளுறை பின்வருவனவற்றுள் எது? $KJMol^{-1}$ இல்

1) +872 2) +2792 3) +132 4) -872 5) +436

**15.** $NCl_3$ ஆனது நீர் பகுப்படையும் போது பெறப்படும் விளைவுகளாவன -

1) $NH_3$, Hcl 2) $NH_3$, HOCl
3) $NH_3$, $HClO_4$ 4) $HNO_3$, $NH_3$

**16.** துருப்பிடித்த சிறிய இரும்பு ஆணித்துண்டு ஒன்றில் 1.4g தூய Fe உம், 1.6g ($Fe_2O_3$) உம் மட்டும் உள்ளது எனின், துருப்பிடிப்பதற்கு முன்பு இருந்த இரும்பு ஆணியின் தூய நிறை என்ன? (Fe=56, O=16)

1) 11.2g 2) 2.62g 3) 3.52g 4) 2.52g 5) 1.12g

**17.** A,B ஆகிய இரண்டு திரவங்களும் ஒன்றுடனொன்று கலக்கும் தன்மையற்றவை. x என்ற ஒரு மூல மென்னமிலம இந்த இரண்டிலும் கரையக்கூடியது.

0.5 mol $dm^{-3}$ செறிவுடைய X ஐக் கொண்டுள்ள 100 $Cm^3$ திரவம் A உடன், 50$cm^3$ திரவம் Bசேர்த்துக் குலுக்கப்பட்டது. இதே வெப்பநிலையில் பெறப்பட்ட சமநிலையில் A திரவத்தின் 25$cm^3$ஐ நியமிக்க 0.5mol$dm^{-3}$ செறிவுடைய HCl(aq) இன் 10$cm^3$ தேவைப்பட்டது. எனின் x இன் A இற்கும் B இற்கும்மிடையிலான பங்கீட்டுக் குணகம் இதே T இல் யாது?

1) 3 2) 1/3 3) 4 4) 1/4 5) 6

**18.** $A_{(s)}$ / $A^{2+}_{(aq)}$(1mol $dm^{-3}$, $25^0c$) // /$L^{2+}_{(aq)}$ (1mol $dm^{-3}$,$25^0c$)/$L_{(s)}$ இங்கே L மின்வாயின் மின்னியக்கவிசை -0.66V ஆகும். A மின்வாயின் மி.இ.வி - 0.88V, -0.33V எனவும் தரப்பட்டுள்ளன. தரப்பட்ட A மின்வாயின் மின் இயக்கவிசையாக தரவுகளின் படி இருக்கக்கூடியது எது என்பதையும், அந்நிலையில் அனோட்டு, கதோட்டு, மொத்த மின்னியக்கவிசை என்னவாக இருக்கும் என்பதையும் தருக.

| விடை | A இற்குரிய மி.இ.வி | அனோட்டு | கதோட்டு | கலத்தின் மி.இ.வி |
|---|---|---|---|---|
| 1) | - 0.33 V | A | L | + 0.99 V |
| 2) | - 0.88 V | L | A | + 0.22 V |
| 3) | - 0.88 V | A | L | + 0.22 V |
| 4) | - 0.33 V | L | A | + 0.99 V |
| 5) | - 0.88 V | A | L | + 1.54 V |

**19.** $C_6H_sNO_2 \longrightarrow C_6H_5OD$ என்ற மாற்றத்திற்குப் பொருத்தமான முதற்படி எது?

1) $NaNO_2$/diHcl 2) $NaNO_2$/Dcl 3) Cucl/Hcl
4) $D_2O$ 5) Sn/ConHcl/$OH^-$

**20.** A $CH_3$-COCl+ B $CH_3NH_2$ தாக்கத்தில்

1) விளைபொருள் $CH_3COCH_3$ ஆகும்.
2) A கருநாடியாகவும், B $e^n$ நாடியாகவும் தொழிற்பட்டு விளைபொருள் $CH_3$-CO-NHCH$_3$ ஆகும்.
3) A இலத்திரன் நாடியாகவும், B கருநாடியாகவும் தொழிற்பட்டு விளைபொருள் $CH_3$-CO-NHCH$_3$ ஆகும்.
4) இத்தாக்கம் Aஇல் நடைபெறும் கருநாட்ட பிரதியீட்டுத்தாக்கமாகும்.
5) 3ம், 4ம் விடைகள் சரியானவையாகும்.

**21.** A $\longrightarrow$ $CH_3CHO$ B $\longrightarrow$ $CH_3COOH$ C $\longrightarrow$ HCOOH


1) $Na_2CO_3$ உடன் A,B,C 3 உம் $CO_2$ ஐத் தரும்.
2) தொலனின் சோதனைப் பொருளுடன் A, B, C 3 உம் விடைதரும்

3) பிரடியின் சோதனைப் பொருளுடன் A,B,C 3ம் விடைதரும்.

4) Aயும் C யும் தொலனின் சோதனைப் பொருட்களுடன் விடை தராது.

5) B,C, $Na_2Co_3$ உடன் Co2 ஐ தருவதுடன், A யும், C யும் வெள்ளியாடி பரிசோதனைக்கும் விடை தரும்.

22.  உடன் அனிலீன் O-5$^0$cல் $HNO_2$ உடன் தொழிற்பட வைத்து $O_3$ பெறப்படும் விளைவும் சேரும் போது பெறப்படும் கட்டமைப்பு [NaNo2 + dilHCl]



23. பின்வரும் காபோனியம் அயன்களின் உறுதியின் இறங்குவரிசை எது?

$A=(CH_3)_2-C^+$ ,$B=^+CH_3$ ,$C= CH_3-\overset{+}{C}-C_2H_5$ (H on each of A and C)

1) A>B>C 2) B>A>C 3) C>B>A
4) C>A>B

24. H-C≡C-H இல் இருந்து Ethanoic acid ஐ இரண்டுபடிகளில் தொகுக்கும் போது 1 ஆம் படியின் சோதனைப் பொருள்/ பொருட்கள்?

1) $Ni/H_2$ 2) $LiAlH_4$ 3) குளிர் NaOH
4) $Hg^{2+}/diH_2So_4$ 5) HCl/NaCN

25. A என்னும் முதல் அமீன் ஒன்று $NaNo_2$/dilHCl உடன் தாக்கம் புரிந்து பெறப்படும் விளைபொருள் L ஆனது $ZnCl_2$/Con HCl உடன் உடனடியாக கலங்கல் தன்மையை தந்தது. L ஐ Cu உடன் △ படுத்தும் போது பெறப்பட்ட பதார்த்தம் N ஆனது $CCl_4/Br_2$ இன் நிறத்தை நீக்கியது. (A இல் Cஇழிவு எண்ணிக்கையில் உள்ளது என்க.) A.L.N முறையே

| | A | L | N |
|---|---|---|---|
| 1) | $CH_3-CH_2-C(NH_2)-(CH_3)_2$ | $(CH_3)_3-C-OH$ | $CH_3-C(CH_3)=CH_2$ |
| 2) | $CH_3-NH_2$ | $CH_3-CH-CH_3$ | $CH_2=CH_2$ |
| 3) | $CH_3-CH(NH_2)-CH_3$ | $CH_3-C(OH)-(CH_3)_2$ | $CH_3-C(H)=CH_2$ |
| 4) | $CH_3-C(NH_2)-(CH_3)_2$ | $(CH_3)_3-C-OH$ | $CH_3-C(CH_3)=CH_2$ |
| 5) | $CH_3-CH(CH_3)-NH_2$ | $CH_3-CH_2-OH$ | $CH_3-C\equiv CH$ |

26. $Cl-CH_2-O-\overset{O}{\overset{\|}{C}}-CH_2-\overset{CHO}{CH}-\overset{CH_3}{CH}-CH_3$ இன் IUPAC பெயர்?

1) Chloro ethoxy -5-oxo-2-methyl, pent-3-al

2) Chloro ethory -5-oxo-2,2-dimethyl but-2-al

3) Chloro methoxy-3-formyl -4-methyl pentanoate.

4) Methyl Chlor - 3-formyl -4-methyl pentenoate

5) Chloro methyl -3-formyl-4-methyl pentanoate

27. $_aCH_2=_bC-C_y\equiv ^zCH$ தொடர்பாக

1) a, b, x-C கள் $Sp^2$ கலப்புடையவை 2) Y,Z,X-C கள் SP கலப்புடையவை

3) a,b,y,Z-C கள் நேர்கோட்டில் காணப்படும் 4) $x\hat{b}y=90^0$ ஆகும்

5) இம் மூலக்கூறின் எல்லா ஊகளும் ஒரே தளத்தில் காணப்படும்.

28.  $CH_2Cl$ எனும் சேர்வையில் எத்தாக்கப் பொறிமுறை நடைபெறாது

1) கருநாட்ட பிரதியீட்டுத் தாக்கம் 2) கருநாட்ட கூட்டற்தாக்கம்
3) நீர்பகுப்புத்தாக்கம் 4) சுயாதீன மூலிகை பிரதியீட்டுத் தாக்கம்

5) $e^n$ நாட்ட பிரதியீட்டுத் தாக்கம்

29) ஒரு மூல் $PCl_3$ ஐ 1 $dm^3$ நீர்க்கரைசல் கொண்டுள்ளது. இக்கரைசல் முற்றாக நடுநிலையாக்குவதற்கு தேவைப்படும் NaOHன் மூல்களின் எண்ணிக்கை யாது?

1) 8 2) 1 3) 6 4) 5 5) 3

30) ஒன்றுடனொன்று கலக்கும் தகவுடைய A, B ஆகிய திரவங்களின் கரைசல் ஒன்று முறையே 2 mol A, 3mol Bஐக் கொண்டுள்ளது. அறை வெப்பநிலையில் $P^o_A$, $P^o_B$ முறையே $5x10^5Nm^{-2}$, $15x10^5Nm^{-2}$ ஆகும். A-A கவர்ச்சிவிசை x, A-B கவர்ச்சிவிசை y, B-B கவர்ச்சிவிசை Z ஆகவும் கருதப்படுகின்றது. அறைவெப்பநிலையில் இக்கரைசலின் ஆவி அமுக்கம் $10x10^5 Nm^{-2}$ ஆகும். வெப்பநிலைகள் $T^o_A$, $T^o_B$ என்க.

1) இது நேர்விலகல் கரைசலாகும் இங்கே கவர்சச்விசை $x>y<z$ எனக்காட்டப்படும்.

2) இது எதிர்விலகல் கலைசலாகும் இங்கே கவர்ச்சிவிசை $x<y>z$ ஆகும்

3) இது இலட்சியக் கரைசலாகும் இங்கே கவர்ச்சிவிசை x=y=z ஆகும்

4) இது எதிர் விலகல் கரைசலாகும் இங்கே $T^o_A < T^o_B$ ஆகும்.

5) இது நேர் விலகல் கரைசலாகும் இங்கே $x<y>z$ ஆகும்.

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| a,b<br>சரி | b,c<br>சரி | c,d<br>சரி | a,d<br>சரி | வேறு ஏதாவது. தெரிவு |

31 - 40 வரை

31. பின்வருவனவற்றுள் $CH_3CH_2MgBr$ உடன் தாக்கமடையக் கூடியது எது/எவை?

a) $CH_3$ CHO b) $CH_3$ $CH_2$ OH

c) $C_2H_2$ d) $CH_3$ - C - $CH_3$

32) பின்வருவனவற்றுள் ஒரே நிறக் கூட்டத் தொகுதிகள் எவை?

a) CuS, NiS, CoS b) $CuCl_2$, CdS, $As_2S_3$

c) $[Cocl_4]^{2-}$, $[Nicl_4]^{2-}$, $[Ni(NH_3)_6]^{2+}$ d) $Cr(OH)_3$, $Fe(OH)_2$ $Ni(OH)_2$

33) ஏபர் முறை $NH_{3(9)}$ உற்பத்தியுடன் தொடர்பற்றவை எவை?

a)250°c b) 450°c c) 250atm d) 450 atm

34) $Na_2So_4$ $10H_2O$ இனது 6.44g எடுக்கப்பட்டு நீரில் கரைக்கப்பட்டு 500 $cm^3$ கரைசலாக்கப்பட்டது. இக்கரைசல் பற்றி சரியானது, சரியானவை எது.'.எவை? Na = 23, S=32, O=16, H=1,

a) இக்கரைசலில் 0.04 mol $Na^+$ அயன்கள் உள்ளன.

b) இக்கரைசலில் $Na^+$ அயன் செறிவு 0.08 mol $dm^{-3}$ ஆகும்.

c) இக்கரைசலில் $So^{2-}_4$ அயனின் செறிவு 0.04 mol $dm^{-3}$ ஆகும்.

d) இக்கரைசலுடன் முற்றாகத் தாக்கமுற 0.04 mol $BaCl_2$ தேவைப்படும்

34) $Na_2So_4$ $10H_2O$ இனது 6.44g எடுக்கப்பட்டு நீரில் கரைக்கப்பட்டு 500 $cm^3$ கரைசலாக்கப்பட்டது. இக்கரைசல் பற்றி சரியானது, சரியானவை எது.'.எவை? Na = 23, S=32, O=16, H=1,

a) இக்கரைசலில் 0.04 mol $Na^+$ அயன்கள் உள்ளன.

b) இக்கரைசலில் $Na^+$ அயன் செறிவு 0.08 mol $dm^{-3}$ ஆகும்.

c) இக்கரைசலில் $So^{2-}_4$ அயனின் செறிவு 0.04 mol $dm^{-3}$ ஆகும்.

d) இக்கரைசலுடன் முற்றாகத் தாக்கமுற 0.04 mol $BaCl_2$ தேவைப்படும்

35) பின்வருவனவற்றுள் சரியானது.'.சரியானவை எது/எவை?

a) சமதானிகளில் நியூத்திரன்களின் எண்ணிக்கை சமனாகும்.

b) ஒரு மூலகத்தின் பிறதிருப்பங்களின் உருகுநிலைகள் வேறுபடலாம்.

c) $HNO_3$ உற்பத்தியில் Pt ஊக்கி பயன்படுகின்றது.

(தொடரும்...)